Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 வைகாசி-14 28-05-2005 சனிக்கிழமை ஓசை 99



கணேசா நகையகம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123. பஜார் வீதி. வவுனியா.
T.P.-024-2222464

இல:184. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987

(சி-11750)

# பொதுக்கட்டமைப்பு உருவாக்கம் வெற்றிபெற்றால்

# இலங்கையில் அரசியல் தீர்வுக்கு அது வழிவகுக்கும்

## தமிழ் நாட்டில் பில்கிளிங்டன் கருத்து



**பொதுக்கட்டமைப்பினூடாக சுனாமி அனர்த்த நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகாவின் முயற்சிகள் வெற்றிபெற்றால் இலங்கையில் தற்போதைய போர்நிறுத்தம் தொடரும் எனவும், அது அரசியல் தீர்விற்கு வழிவகுக்குமெனவும் அமெரிக்காவின் முன்னாள் சனாதிபதியும், சுனாமி நிவாரணத்திற்கான ஐ.நா.வின் சிறப்புத் தூதுவருமான பில் கிளிங்டன் கூறியுள்ளார்.**

தமிழ்நாட்டிற்கு நேற்று விஜயம் செய்த இவர் சுனாமியால் பாதிக்கப்பட்ட நாகபட்டினம் மக்களுக்கான தற்காலிக குடியிருப்புக்களிலுள்ள மக்களுடன் உரையாடிய பின்னர் செய்தி யாளர்களைச் சந்தித்தபோதே இவ்வாறு கூறினார்.

இலங்கை விடயம் தொடர்பாக அவர் அங்கு மேலும் கூறுகையில், தமிழ்மக்களுடன் இணைந்து புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள சனாதிபதி சந்திரிகா முடிவெடுத்திருப்பது துணிச்சலானதும், வரவேற்கத்தக்க தெனவும் கூறியதுடன் இலங்கையில் நிரந்தர அரசியல் தீர்வு ஏற்பட தனது சிறிய பங்களிப்பு சந்திரிகாவின் முயற்சிக்குத் துணை நிற்கும் என்றார்.

## பொதுகட்டமைப்பை எதிர்த்து கண்டியில் ஹெல உறுமய மீண்டும் சத்தியாக்கிரகம்

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்புக்கு எதிராக நேற்று மீண்டும் ஒருமுறை ஜாதிக ஹெல உறுமய கண்டியில் சத்தியாக்கிரகப்போராட்டத்தை நடத்தியது.

கண்டி தலதாமாளிகைக்கு முன்னால் இந்தப்போராட்டம் நடத்தப்பட்டது.

ஏற்கனவே கண்டியில் கடந்த 16 ஆம் திகதி நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தின்போது ஜாதிக ஹெல உறுமய சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்தியது.

இதேவேளை நேற்று இடம்பெற்ற சத்தியாக்கிரகத்தின்போது உரை யாற்றிய ஜாதிகஹெல உறு மயவின் பாராளுமன்றக் குழுத்தலைவர் அத்துரலியே ரத்னதேரர் தமிழீழ விடுதலைப்புலிகள் இன்னும் தமது நம்பிக்கையை வெளிப்படுத்தவில்லை எனவே அவர்களை நம்பி பொதுக் கட்டமைப்பு வழங்கப்படுவது ஆபத்தானது எனக் குறிப்பிட்டார். (32)

## சனாதிபதி –ஜே.வி.பியின் சந்திப்பு காலதாமதமாக ஆரம்பித்தது!

### - பெறுபேறுகள் குறித்து தகவலில்லை

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக சனாதிபதிக்கும் ஜே.வி.பி.க்கும் இடையிலான சந்திப்பு நேற்று பல மணிநேர காலதாமதத்தின் பின்னர் நடைபெற்றது. எனினும் இக்கூட்டத் தின் பெறுபேறுகள் குறித்துத் தகவல்கள் எதுவும் உடன் வெளியிடப்பட வில்லை.

பேச்சுவார்த்தை சனாதிபதி மாளி கையில் பிற்பகல் மூன்று மணிக்கு ஆரம்பமாகவிருந்தபோதும் இரவு ஏழு மணியளவிலேயே ஜே. வி. பி உறுப் பினர்கள் சனாதிபதி மாளிகைக்குள் சென்றதாக சனாதிபதி செயலக தரப்பால் தெரிவிக்கப்பட்டது. எனினும் பேசப்பட்ட விடயங்கள் எவையும் வெளியாகவில்லை. இதேவேளை இந்த பேச்சுவார்த்தையில் பங்கேற் பதற்காக ஜப்பான் சென்றிருந்த

(12ஆம் பக்கம் பார்க்க)

## உரும்பிராயில் கண்ணிவெடி விபத்து "கலோட்ரெஸ்ட்" பணியாளர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். உரும்பிராய் பகுதியில் இடம்பெற்ற கண்ணிவெடி விபத்தொன்றில் கலோட்ரெஸ்ட் கண்ணிவெடிகள் அகற்றும் பிரிவைச் சேர்ந்த பணியாளர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்றுக் காலை 8.30 மணியளவில் நடைபெற்ற இவ்விபத்துச் சம்பவத்தில் மானிப்பாய்ப் பகுதியைச் சேர்ந்தவரும் கலோட்ரெஸ்ட் பணியாளருமான வேதநாயகம் லெனின் (வயது-23) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

பிரஸ்தாப பணியாளர் மேற்படி பகுதியில் படையினரால் கண்ணிவெடிகள் புதைத்து வைக்கப்பட்ட இடம் ஒன்றில் மிதிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோதே இவ்விபத்தில் சிக்கியுள்ளார். (33)

## புலிகளின் பிரதேசத்தினுள் அத்துமீறி நுழைந்த மூவருக்கு தமிழீழ நீதிமன்றம் விளக்கமறியல்

(மட்டக்களப்பு)

விடுதலைப்புலிகளின் கட்டுப் பாட்டுப் பிரதேசத்திற்குள் அத்துமீறிப் பிரவேசித்து சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடினார்கள் என்ற குற்றத்தின் பேரில் போராளிகளால் கைது செய்யப்பட்ட சிங்கள ஊர் காவற்படை வீரரொருவர் உட்பட மூவர் நேற்று தமிழீழ நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டு நீதிமன்ற உத்தர வின் பேரில் எதிர்வரும் பத் தாம் திகதிவரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட எல்லைப் பிரதேசத்திலுள்ள பக்கி யல்லவைச் சேர்ந்த ஊர்காவல்படை வீர் முதியன்சலாகே சமிந்த (வயது -24) சூரியப்பெரும ஆராய்ச்சிகே ஜனாக பிரதீப்குமார் (வயது -22) அத்தனா யக்க முதியன் சலாகே சாந்தபால (வயது-20) ஆகியோர்களே கைது செய்யப்பட்டவர்களாவர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு மாவடி முன்மாரி கோட்ட இராணுவப் பிரிவுப் போராளிகள் வழமையான ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்

(12ஆம் பக்கம் பார்க்க)

### –பிந்துனுவெவ தமிழ் இளைஞர் படுகொலை வழக்கில்–

## மரண தண்டனை பெற்ற நால்வரும் உயர் நீதிமன்றால் நேற்று விடுதலை!

(கொழும்பு)

பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் வைத்து 27 தமிழ் இளைஞர்கள் கொலை செய்யப்பட்ட வழக்கில் மரண தண்டனை பெற்ற சிறிலங்காப் பொலிஸ் அதிகாரி உட்பட நான்கு சிங்களவர்களும் உயர் நீதிமன்றத்தால் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

2000 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 25 ஆம் திகதி பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் பயங் கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த 27 தமிழ் இளைஞர்கள் கொலை செய் யப்பட்டதுடன் மேலும் 14 பேர் காயங்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். இந்தச் சம்பவம் தொடாபில் 81 குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் கொழும்பு மேல் நீதிமன்றம் 2003 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி ஐவருக்கு மரண

(12ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா நீதித்துறை சுதந்திரம் பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது

### -மனித உரிமைகள் ஆர்வலர் கந்தசாமி

(கொழும்பு)

சிறிலங்காவின் நீதிச் சுதந்திரத்தில் எங்களுக்கு பெரும் ஏமாற்றமே கிடைத்துள்ள தென கொழும்பு மனித உரிமைகள் ஆர்வலர் கந்தசாமி தெரிவித்தார்.

பிந்துனுவெவ புனர்வாழ்வு நிலையத்தில் தமிழ் இளைஞர்களைப் படுகொலை செய்த வர்களை உச்ச நீதிமன்றம் விடுதலை செய்ததையடுத்து இந்தச் சம்பவத்தினால் பாதிக் கப்பட்டவர்கள் சார்பாக சட்டத்தரணிகளை அமர்த்திய கொழும்பு மனிதஉரிமைகள் ஆர்வலர் கந்தசாமி சர்வதேச செய்தி ஊடகம் ஒன்றிற்கு தமது கருத்துக்களை வெளியிடு கையில் மேலும் தெரிவித்ததாவது,

பண்டாரவளை பிந்துனுவெவ கொலைச் சம்பவம் நடைபெற்ற அன்றிலிருந்து நான் சார்ந்த மனித உரிமைகளுக்கும், அபிவிருத் திக்குமான நிலையம் பல கட்டங்களில் நடவ டிக்கை எடுத்துவந்தது,.

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### மணமகள் தேவை

யாழ்ப்பாணம் இந்துக் குடும்பத்தைச் சேர்ந்த 45 வயது, சொந்தமாக ஒரு நிறுவனத்தை நடாத்தி வருபவரும் யாழ்ப்பாணத்தில் சொந்த வீடும் உடைய விவகாரத்துப் பெற்ற வருக்கு திருமணமாகாத அல்லது வித வையான பெண் தேவை. பெண் யாழ்ப்பாணத்தில் வந்து வசிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும். சாதகம் படம் மற்றும் குடும்ப விபரங் களுடன் கடிதம் மூலம் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- திருமதி கமலாதேவி, 445 மணிக் கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (5378)

### காணி விற்பனைக்குண்டு

புதுக்குடியிருப்பு கைவேலியில் தென்னங்கன்றுகள் நடப்பட்ட நிலையில், ?2 ஏக்கர் உறுதிக்காணி விற்பனைக் குண்டு. தொடர்புக்கு - நவரட்ணம் (நவம்),கைவேலி (காலை 7.30க்குமுன்வருகைதரவும்.) (6160)

### விசேட ஆங்கில வகுப்புக்கள

GRAMMAR $ SPOKEN.

O/L,A/L மாணவர்களுக்கும் தொழில்புரிவோருக்கும் காலம்- புதன்,சனி,ஞாயிறு மாலை 5-6 மணி இடம் - அன்னைவேளாங்கன்னி ஆலயம் முன்பாக, உதயநகர் -கிழக்கு ஆசிரியர்-K.YOKAN (BBA$NDE). (6141)

# தவறவிடப்பட்டபணம் கண்டெடுத்து ஒப்படைப்பு

(நமதுநிருபர்)

கிளிநொச்சியிலுள்ள நிறுவனம் ஒன்றில் ஊழியர் ஒரு வரால் தவற விடப்பட்ட குறிப்பிட்ட தொகைப் பணம் அங்கு பணிபுரியும் மற்றொரு ஊழியரால் கண்டெடுக்கப்பட்டு உரியவரிடம் ஒப்படைக் கப்பட்டது.

குறிப்பிட்ட நிறுவனத்தில் பணி புரியும் சர்வேஸ்வரன் என்பவரா லேயே பணம்கண்டெடுக்கப்பட்டு உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இவரது நடவடிக்கையினை நிறுவன நிர்வாகத்தினர் பாராட்டி உள்ளனர்.

# வவுனியா-ஓமந்தை பேருந்தில் பெண் பயணியிடம் திருட்டு

(நமது நிருபர்)

வவுனியாவில் இருந்து ஓமந்தை நோக்கி பேருந்தில்வந்துகொண்டி ருந்த பெண் பயணி ஒருவரிடமிருந்து பெறுமதியான பொருட்கள் திருடப் பட்டுள்ளன.

மிகவும் நெருக்கமான நிலையில் இந்தப்பயணி பேருந்தில் நின்று வந்து கொண்டிருந்த வேளை அவரது பிர யாணப்பையினை திறந்து இப் பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

பெருந்தொகைப்பணம் மற்றும் அடையாள அட்டை போக்குவரத்து பிரிவின் பயண அனுமதியட்டை உட்பட சில பொருட்கள் களவாடப் பட்டுள்ளன.

வட்டக்கச்சி கல்மடு நகரைச் சேர்ந்ததிருமதி. அந்தோனியாப்பிள்ளை என்ப வரிடமிருந்தே இவை திருடப்பட் டுள்ளன.

இத்திருட்டு தொடர்பாக ஓமந்தை பொலிசில் முறையிடப்பட்டுள்ளது.

# பயிற்சி வகுப்பு

மன்னார் மாவட்டத்தின் சகல பிரதேசசெயலர் பிரிவுகளிலுமிருந்து தெரிவு செய்யப்பட்ட முப்பத்தைந்து பயனாளிகளுக்கு பொருண்மிய மேம்படுத்தலுக்கான பயிற்சி வகுப் புக்கள் நடைபெற்றுள்ளன சர்வதேச கெயர்நிறுவனத்தால் ஒழுங்கு படுத்தப்பட்ட இரண்டு நாள் பயிற்சிகள் வட்டக்கச்சியிலிருக்கும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணையில் கடந்த செவ்வாய்க் கிழமை இடம் பெற்றது.

நீர்முகாமைத்துவத்துடனான விவசாயம்,மாற்றுச் சக்திப்பயன்பாடு, சூரியவலு, காற்றுவலுவின் பயன்பாடு, நாற்றுப்பண்ணை, பன்றி வளர்ப்பு, பல்லினகோழிவளர்ப்பு, பல்லின கால்நடைவளர்ப்புப் போன்ற சகல பகுதிகளுக்குமான நிறைவான பயிற்சி வழங்கப்பட்டதாகப் பொருண் மிய செய்திக்குறிப்பொன்று தெரிவிக் கின்றது. (15)

# "அவஸ்தைகள்" கவிதைத்தொகுதி இன்று வெளியீட்டு விழா

(வவுனியா செய்தியாளர்)

காலநதி மாத இதழின் வெளியீடாக நானாட்டன் ஜெகனின் "அவஸ்தைகள்" என்ற கவிதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா இன்று மாலை 3.00 மணிக்கு நானாட்டான் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம், சிவசக்தி ஆனந்தன், சிவநாதன் கிஷோர் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (10).

## சான்றிதழ் வழங்கும் வைபவமும் பயிற்சிநிறைவு விழாவும்

பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத் தினால் நோர்வே நிதியுதவியுடன் நடைமுறைப் படுத்தப்பட்ட தட்டச்சு, இலத்திரனியல்,மரவேலைப் பயிற்சிகளில் சித்தி அடைந்த மாணவர்களிற்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும், பயிற்சி நிறைவு விழாவும் எதிர்வரும் 30.05.2005 திங்கட்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு பெண்கள் அபிவிருத்தி புனர் வாழ்வு நிறுவனமுதன்மைச் செயலகத்தில் நடை பெற இருப்பதால் கற்கைநெறி கற்ற அனைத்து மாணவர் களையும் இந்நிகழ்வில் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:-

இ.கமலா,
திட்டப்பணிப்பாளர்,
பெ.அ.பு.நிறுவனம்,
முதன்மைச்செயலகம்,
கிளிநொச்சி.

(சி.12161)

## பாராட்டுகின்றோம்

கல்வியுலகின் கலங்கரைவிளக்காகி, எல்லையிலாச் சேவையினை இனிதே ஆற்றி 05.05.2005 இல் ஒய்வு பெற்றுள்ள எங்கள் அன்பிற்கும், மதிப்பிற்கும் உரிய திரு க.வைரமுத்து (பிரதிக் கல்விப்பணிப்பாளர், முகாமைத்து வம், வலயக்கல்விப்பணிமனை , கிளிநொச்சி) அவர்கள் கிளி/ கலவெட்டித்திடல் நாகேஸ்வர வித்தியாலயத்தில் பழைய மாணவராக, ஆசிரியராக, அதிபராக இருந்து அரும்பணி ஆற்றியவர். இவரது சேவையைப் பாராட்டி வாழ்த்துவதில் நாங்கள் மகிழ்வடைகின்றோம்.

அதிபர்,
ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
பழையமாணவர்சங்கத்தினர்,
பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தினர்.

(6208)

## முல்லை மாவட்டக் கட்டட நிர்மாணிகள் சங்க ஒன்று கூடல்

29.05.2005 காலை 9.00 மணிக்குப் புதுக் குடியிருப்புச் சிறி சுப்பிரமணியம் வித்தியாலயத் தில் முல்லை மாவட்டக் கட்டட நிர்மாணிகள் அனைவருக்குமான ஒன்று கூடல் நடைபெற வுள்ளதால் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தலைவர்,
முல்லை மாவட்டக் கட்டட நிர்மாணிகள் சங்கம்,
முல்லை மாவட்டம்.

செயலாளர்,
முல்லை மாவட்டக் கட்டட நிர்மாணிகள் சங்கம்,
முல்லை மாவட்டம்.

(...206)

## தமிழீழ வைப்பகம்

## பணிநிலை வேண்டுகை

தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன

பணிநிலை :- அலுவலக உதவியாளர் தரம்-04 (சிற்றூழியர் தரம்-04 /Peon Grade-04)

தகைமைகள் :-
i. க.பொ.த.(சாதாரணதர)தேர்வில் கணிதம் 42/கணிதம் II, தமிழ் உட்பட 04 பாடங்களில் ஒரே அமர் வில் சித்தியடைந்திருக்க வேண்டும்.
ii. ஆண்பாலார் மட்டும்.

மாதாந்த ஊதியம் :- $\frac{1,870-2,870}{50X20}$ +6,000

அகவை எல்லை :- 18-25 வருடங்கள்

மேற்காட்டப்பட்ட பணிநிலைக்குத் தகுதியானவர்கள் தம்மால் தயாரிக்கப்பட்ட சுயவிளக்கங்களுடனும், கீழ்க்காட்டப்படும் ஆவணங்களுடனும் யாழ்சாலை, கரடிப்போக்கு, கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பக,நடுவப் பணியகத்திற்கு, 30.05.2005 ஆம் நாள் திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நேரில் வருகை தருமாறு வேண்டப்படுகின்றனர்.

01. கல்வித்தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்
02. ஏனைய தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்
03. ஆள்அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்
04. நற்சாட்சிப் பத்திரங்கள்

தமிழீழ வைப்பகம் BANK OF TAMILEELAM

மனிதவள மேலாளர்,
மனிதவளப்பகுதி,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.

(சி.11967)





குண்டு வெடிப்பு இடம்பெற்ற இடத்தைப் பார்வையிடும் பொலிசாரையும், காய மடைந்த சிறுவனை அப்புறப்படுத்து வதையும் படங்களில் காணலாம்.

# பள்ளிவாசலில் தற்கொலைத்தாக்குதல்

# பாகிஸ்தானில் 15 பேர் உடல் சிதறிப் பலி

(இஸ்லாமபாத்)

**பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமபாத்திலுள்ள முஸ்லிம் பள்ளிவாசலின் வணக்கஸ்தலத்தில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 15இற்கும் மேற்பட்டோர் பலியாகியதுடன், பலர் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது.**

பல நாடுகளின் தூதரகங்கள் மற்றும் அரசாங்கக் கட்டடங்களை உள்ளடக்கிய பகுதியிலுள்ள வணக்கஸ்தலமொன்றிலேயே இக்குண்டு வெடிப்பு இடம்பெற்றுள்ளது.

இது ஒரு தற்கொலைத் தாக்குதலாக இருக்கலாம் என்று இஸ்லாமபாத் பொலிஸ் பிரதம அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இக்குண்டுவெடிப்பு இடம்பெற்றபோது பெரும்பான்மையினரான சுனிமுஸ்லிம் இனத்தவரும், சிறுபான்மையினத்தவரான சியா முஸ்லிம் மக்களும் இந்த வணக்கஸ் தலத்தில் கூடியிருந்தார்கள் என்று தனியார் தொலைக்காட்சி நிறுவனம் அறிவித்துள்ளது.

பாகிஸ்தானுக்கான தனது விஜயத்தை அமெரிக்க உதவி இராஜாங்க செயலாளர் கிறிஸ்ரினா றொக்கா முடித்துக்கொள்ளும் இந்த வேளையிலும் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்குமிடையில் இஸ்லாமபாத்திற்கு அருகிலுள்ள ராலப்பிண்டி நகரத்தில் சமாதானப் பேச்சுக்கள் இடம்பெறும் வேளையிலும் இந்தக் குண்டுவெடிப்பு நிகழ்ந்துள்ளது.





குண்டுவெடிப்பில் பலியானவர்களின் உடல்களைப் புதைக்கும் காட்சியையும், காயமடைந்த ஒருவரை அப்புறப்படுத்தும் பொலிசார் ஒருவரையும் படங்களில் காணலாம்.

## தீவிரவாதிகள் ஏவுகணைத் தாக்குதல்; உலங்குவானூர்தி வெடித்துச் சிதறியது

(பாக்தாத்)

ஈராக்கின் பகுபா நகரில் தீவிரவாதிகள் நடாத்திய ஏவுகணைத் தாக்குதலில் அமெரிக்க உலங்குவானூர்தி ஒன்று வெடித்துச்சிதறியதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது அதில் பயணம் செய்த இரு விமானிகளும் இறந்திருக்கலாமென அஞ்சப்படுகிறது.

ஈராக்கில் அமெரிக்க இராணுவத்தினருக்கு எதிராகவும், ஏனைய நாட்டு அதிகாரிகளுக்கு எதிராகவும் தீவிரவாதிகள் கடந்த பல மாதங்களாகக் கார்க்குண்டுத் தாக்குதல்களை நடத்தி வருகிறார்கள். தீவிரவாதிகளின் தாக்குதல்களைச் சமாளிக்க முடியாமல் ஈராக்கில் புதிய அரசும், அமெரிக்க இராணுவமும் திணறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதே வேளை பாக்தாத் நகரில் தீவிரவாதிகளின் தாக்குதல் அதிகரித் துள்ளதைத் தொடர்ந்து அந்த நகருக்கு நாற்பதாயிரம் இராணுவத்தினரை அனுப்பி வைக்கப் போவதாக ஈராக் அரசு அறிவித் துள்ளது.

அந்த இராணுவத்தினர் பாக்தாத் நகரை முற்றுகையிட்டு தீவிரவாதிகளுக்கு எதிராகத் தாக்குதலை நடத்தவுள்ளனர். 675 சோதனைச் சாவடிகளையும் பாக்தாத் நகரைச் சுற்றி அமைத்து வருகிறார்கள்.

## அமெரிக்கப் படையினரால் சிறையில் குர்ஆன் அவமதிக்கப்பட்டதை ஒப்புக் கொண்டது பென்டகன்

ஈராக்கில்'குர்ஆன்' அவமதிக்கப்பட்டதை முதலில் மறுத்த அமெரிக்கா இப்போது அதை ஒப்புக் கொணடுள்ளது. இது தொடர்பாக குவாண்டனாவோ சிறையின் உயர் அதிகாரி ஒருவர் விசாரணை நடத்தினார். அவர் விசாரணை நடத்தியதில் ஐந்து முறை குர்ஆன் அவமதிப்புச் சம்பவம் நடந்ததாகத் தெரியவந்துள்ளது. வோஷிங்டனிலுள்ள பென்டகன், இராணுவ அலுவலகமும் இந்தக் குற்றச் சாட்டை ஒப்புக்கொண்டுள்ளது.

'ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்ட கைதிகள் கியூபாவிலுள்ள குவாண்டனாபோ சிறையில் அடைக்கப்பட்டு இருந்தனர்.

ஈராக் சிறையில் கைதிகளை அமெரிக்க இராணுவத்தினர் நிர்வாணமாக்கி சித்திரவதை செய்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இப்போது குவாண்டனாவோ சிறையில் அமெரிக்க இராணுவத்தினர் கைதிகளிடம் இருந்த 'குர்ஆன்' புத்தகத்தைப் பறித்து கழிவறையில் வீசியதாகப் புகார் எழுந்தது.அமெரிக்க இராணுவத்தினரின் இந்த நடவடிக்கைக்குப் பல்வேறு முஸ்லிம் நாடுகளிடம் பலத்த எதிர்ப்புக் கிளம்பியது. இது தொடர்பாக ஆப்கானிஸ்தானில் நடந்த கலவரத்தில் மட்டும் 15 பேர் பலியானார்கள்.




லண்டனில் நடைபெற்ற பி.பி.சி செய்தி ஸ்தாபனத்தில் பணியாற்றும் ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பு.

### தீவிரவாதிகள் மிரட்டல் எதிரொலி அமெரிக்கத் தூதரகம் மூடப்பட்டது

(ஜகார்த்தா)

இந்தோனேஷிய நகரங்களிலுள்ள அமெரிக்கத் தூதரகங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல் வந்ததைத் தொடர்ந்து அவை நேற்று முன்தினம் முதல் மூடப்பட்டன.

இந்தோனேஷியாவிலுள்ள அமெரிக்கர்களுக்கு அனுப்பிய மின் அஞ்சலிலும், இணைய தளத்திலும் அமெரிக் கத்தூதரகங்கள் மூடப்பட்ட தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எந்த நேரத்திலும், எந்த நகரத்திலும் தாக்குதல் நடக்கலாம் என்பதால் தூதரகங்கள் மூடப்பட்டுள்ளது என்று அமெரிக்கத் தூதரக இணைய தளத்தில் கூறப்பட்டுள்ளது.



ஈராக்கின் பாதுகாப்பு அமைச்சர் பாக்தாத்தில் நடைபெறும் தீவிரவாதிகளின் தாக்குதலை முறியடிக்க இடிமுழக்கம் இராணுவ நடவடிக்கைக்காக பல்லாயிரக்கணக்கான அமெரிக்கத் துருப்புக்களை இறக்கப்போவதாக நேற்று அறிவித்துள்ள நிலையில் கடந்த 22 ஆம் திகதி துப்பாக்கிச் சமரின் பின் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் ஈராக்கியப்படைவீரர்.

## பறவைக் காய்ச்சல் நோய்க்கு தடுப்பு மருந்து சீனா கண்டுபிடிப்பு

(பீஜிங்)

பறவைக்காய்ச்சல் நோய்க்கு இருவகை மருந்துகளை சீனா தயாரித்துள்ளது.

இது சோதித்துப் பார்க்கப்பட்டதாகவும், நோயை முற்றிலுமாகத் தடுக்க இது பயனுள்ளதாக இருக்கிறது என்று தெரியவந்துள்ளதாகவும் ஹரிபின் நகரிலுள்ள சீன பறவைக் காய்ச்சல் தடுப்புத் தேசிய ஆய்வக இயக்குநர் சென்ஹு லான் கூறினார்.

இதற்கிடையில், பறவைக் காய்ச்சல் நோயை உறுதிப்படுத்தும் சோதனைக்கு இப்போது 72 மணி நேரம் ஆகிறது. பத்து மணி நேரத்தில் சோதனையை முடிக்கும் வகையில் புதிய மூன்று தொழில்நுட்பங்களையும் சீனா உருவாக்கியுள்ளது.

## கடல் பகுதியை நிலமாக்கும் சீனாவின் திட்டம் பேரழிவை ஏற்படுத்தும் –வல்லுநர்கள் எச்சரிக்கை

(பீஜிங்)

சீனாவில் கடல் பகுதிகளை நிலமாக்கி வரும் நடவடிக்கைகளால் கடலோரப் பகுதிகளில் மிகப் பெரிய அழிவு ஏற்படும் என வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.

கடலில் பலவற்றைக் கொட்டி நிலமாக்கும் நடவடிக்கைகளால் சுற்றுச் சூழல் வெகுவாகப் பாதிக்கப்படுகிறது என அந்நாட்டு கடல்சார் நிர்வாகத்தின் புள்ளி விபரங்கள் மற்றும் தகவல் சேவை பிரிவு நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

கடல் பகுதிகளை நிலமாக்கி வருவதால் கடல் வாழ் உயிரினங்கள், தாவரங்கள் ஆகியவற்றின் வாழ்க்கை முறை பாதிக்கப்படுகிறது. மேலும் நதி முகத்துவாரம் அடைபட்டு விடுகிறது. இதனால் கடலோரப் பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட வாய்ப்பு இருக்கிறது எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.



நியூஸ்வீக் சஞ்சிகைக் காரியாலயம் புனித குர்ஆனை இழிவுபடுத்தியதைக் கண்டித்து பாகிஸ்தான் கராச்சியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணி.

## 75 எப்.16 ரக விமானங்களை பாகிஸ்தான் அமெரிக்காவிடம் இருந்து கொள்வனவு

அமெரிக்காவிடமிருந்து 75 போர் விமானங்களை பாகிஸ்தான் வாங்குவதற்குத் திட்டமிட்டுள்ளது.

பாகிஸ்தான் அணுகுண்டு சோதனையை நடத்தியதும் அதன் மீது பொருளாதாரத் தடையை அமெரிக்கா பிரகடனப்படுத்தியது.

சனநாயக நெறிப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியைக் கவிழ்த்து விட்டு இராணுவத்தளபதியான முஷாரப் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டதையும் அமெரிக்கா ஏற்கவில்லை. இதனால் பாகிஸ்தான் மீது கசப்பான உணர்வே அமெரிக்காவுக்கு இருந்தது. இதனால் போர் விமானங்களை பாகிஸ்தானுக்கு விற்க தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் ஆப்கான் மீது போர் தொடுத்த புஷ்ஷுக்கு அதன் அண்டை நாடான பாகிஸ்தானின் நட்பும் ஆதரவும் ஒத்துழைப்பும் அவசியமாக இருந்தது. இதனால் பாகிஸ்தானுக்கு நிதி உதவியை புஷ் வாரி வழங்கினார். கடைசியாக போர் விமானங்கள் விற்பனைக்கு இருந்த தடையையும் இரத்துச்செய்தார்.

இதைத் தொடர்ந்து அமெரிக்காவிடமிருந்து 'எப்.16' ரக போர் விமானங்களை வாங்குவதற்கு பாகிஸ்தான் திட்டமிட்டுள்ளது. அதற்கான விலையைக் குறிப்பிடுமாறு அமெரிக்காவை பாகிஸ்தான் கேட்டுக்கொண்டுள்ளது.

20 போர் விமானங்களை மட்டும் பாகிஸ்தான் வாங்கும் என்று இராணுவ நிபுணர்கள் எதிர்பார்த்திருக்க 75 போர் விமானங்களை பாகிஸ்தான் வாங்கத் திட்டமிட்டிருப்பது இராணுவ வட்டாரங்களை வியக்க வைத்துள்ளது.இதன் மூலம் பாகிஸ் தான் விமானப்படையின் பிரதான விமானமாக 'எப் 16' ரக விமானங்களே இருக்கும் என்பது உறுதியாகியுள்ளதுஎப் 16 ரக போர் விமானங்களை வாங்கு வதற்கு ஒப்பந்தம் கையெழுத்தானது முதல் மூன்று ஆண்டுகள் கழித்துத்தான் இவை பாகிஸ்தானுக்கு விநியோகம் செய்யப்படும் என்று அமெரிக்க அதிகாரிகள் கூறியுள்ளனர். ஒரு விமானத்தின் விலை 250 கோடி இந்திய ரூபாய்களாகும்.

# சோரன்பற்று, பூநகரி பிரதேசங்களில் நடைபெற்ற மாவீரர் பெற்றோர் கௌரவிப்பும், வீரமுரசு நிகழ்வும்

(அலுவலக செய்தியாளர்)

**கானல் நீர் போன்ற சமாதானத்தை நம்பிக்காத்திராது எமது மண்ணிலிருந்து எதிரி ஓடுவதற்கு தயாராக இருக்கும் இந்த நேரத்தில் நாம் அவனைத் துரத்தத்தயாராகுவோம்.**

இவ்வாறு கடந்த செவ்வாய்க் கிழமை பூநகரி ஜெயபுரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெற்ற மாவீரர் பெற்றோர் கௌரவிப்பும், வீரமுரசு நிகழ்விலும் கலந்து கொண்டு தமிழீழ ஊரகவளச்சிப் பொறுப்பாளர் கந்தம்மான் கருத்துரை நிகழ்த்துகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; ஒவ்வொரு மாவீரர் தினத்திலும் ஒவ்வொரு வெற்றிச் செய்தியுடன் தான் எமது தேசியத்தலைவரின் மாவீரர் உரை ஆரம்பமாகும். கடந்த மாவீரர் தின உரையில் பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு என தேசியத்லைவர் எடுத்தியம்பினார். அந்தப் பொறுமையின் எல்லைக்கோட்டினை நாம் அண்மித்து விட்டோம் எமது தேச விடுதலையினை முன்னெடுப்பதைத் தவிர எமக்கு இனி வேறு வழியில்லை.

ஆசிரியர் இளங்கீரன் தலைமையில் நேற்று முன்தினம் பூநகரி ஜெயபுரம் அ.த.க.பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமான மாவீரர் பெற்றொர் கௌரவிப்பு ,வீரமுரசு நிகழ்வில் பொதுச்சுடரினை ஜெயபுரம் வர்த்தக சங்கத் தலைவர் சுரேஸ், பூநகரி முழங்காவில் அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் சிவசாமி ஆகியோர் ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக்கொடியினை தமிழீழ ஊரக வளர்ச்சிப் பொறுப்பாளர் கந்தம்மான் ஏற்றிவைத்தார்.

பொதுப்படத்திற்கான ஈகச்சுடரினை மன்னார் மாவட்ட கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழன் ஏற்றிவைத்தார். பொதுப் படத்திற்கான மலர் மாலையினை கிளி.மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் கலைவாணன் அணிவித்து வைக்க, மாவீரர்களின் பெற்றோர் தங்களது பிள்ளைகளின் திருவுருவப்படங்களிற்கான மலர் மாலைகளை அணிவித்தனர்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவை செயலர் சு.பசுபதிப்பிள்ளை, ஜெயபுரம் வெகுசன ஒன்றியத் தலைவர் பொ.தங்கராசாஆகியோர் கருத்துரைகளை வழங்கினர். தொடர்ந்து சொக்கலிங்கம் சிறுவர் பூங்கா முன்பள்ளி மாணவர்களினதும், ஜெயபுரம் பாடசாலை மாணவர்களினதும் கவிதை, கிராமிய நடனம் என்பன இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மாவீரர் பெற்றோர் கௌரவிப்பும், வீரமுரசு நிகழ்வும் நேற்றுமுன்தினம் மாலை 5.00 மணிக்கு சோரன் பற்று கணேசாவித்தியாலய வளாகத்தில் ஊரக தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் கேதீஸ்வரனின் தலைமையில் நிகழ்வு ஆரம்பமானது.

இந்நிகழ்வின் பொதுச்சுடரினை கிளி.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைசெயலர் பசுபதிப்பிள்ளை, பளை கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளா் புவனேந்திரன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியினை கிளி.மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் அருள் ஏற்றிவைத்தார். சோரன் பற்று மாவீரர்களின் திருவுருவப்படங்களிற்கான ஈகச் சுடர்களையும், மலர் மாலைகளை யும் அவர்களின் பெற்றோர்கள் அணிவித்தனர்.

நினைவுரையினை பளைக் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் உறுப்பினர் நகுலன், கிளி. மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் பசுபதிப்பிள்ளை ஆகியோர் ஆற்றினர்.

அதனைத் தொடர்ந்து சிறப்புரையினை கிளி.மாவட்ட அரசியல் துறை நிர்வாகப் பொறுப்பாளர் ஈகைவேந்தன் ஆற்றினார். இந் நிகழ்வில் பொதுமக்கள், போராளிகள் எனப் பலர் கலந்து கொணடமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியர் ஆலயத்திருவிழா ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு

(வடமராட்சி)

வடமராட்சி செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியர் ஆலய வருடாந்த திருநாள் கொண்டாடப் பட்டது. கடந்த 10 நாட்களாக கோயில் கொடியேறி 26 ஆம் திகதி காலை 7 மணிக்கு அதி வணக்கத்துக்குரிய யாழ்.மறை மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகையின் தலைமையில் திருநாள் திருப்பலி நடைபெற்றது. இப்பெருவிழாவில் யாழ்ப்பாணம், வவுனியா மன்னார் உட்பட ஏனைய மாவட்டங்களிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

திருச்சுரூபம் பவனியாக சுனாமியால் அழிவுற்ற கடற்கரைக்கு மக்கள் புடைசூழ கொண்டு செல்லப்பட்டது. மக்கள் கடந்த வருடத் திருப்பலியில் கலந்துகொண்ட உறவுகள் இந்தவருடம் தங்களுடன் இல்லையே என்ற மன ஆதங்கத்துடன் கலந்து கொண்டனர்.

# பூநகரி-பரந்தன் வீதிக்கு தார் ஊற்றக் கோரிக்கை

(பூநகரி)

பூநகரி-பரந்தன் வீதியில் குஞ்சுப் பரந்தனில் இருந்து பூநகரி வாடியடி வரையும் கிறவுல் பரப்பி மடடமாக்கப்பட்டுள்ளது. வாகனப் போக்குவரத்து நிறைந்த இவ்வீதியில் வாகனங்களின் பின்னால் செல்வோருக்கு முன்செல்லும் வாகனம் தெரியாத அளவிற்கு புழுதி எழுகின்றது. அத்துடன் எதிரே வரும் வாகனங்களைக் கூடமக்கள் இனங்கண்டு வழிவிடமுடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதென மக்கள் விசனம் தெரிவிப்பதோடு உரியவர்கள் இவ்வீதியைத் தார் போட்டு தந்துதவுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(34)

# த.பு.கழக அனுசரணையில் சிறார்களின் முன்னேற்றம் தொடர்பான கருத்தமர்வு

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையம் முன்பள்ளிச் சிறார்களின் கல்வி வளர்ச்சியையும், முன்பள்ளிகளின் கல்வி அபிவிருத்தியையும் ஊக்கமளிக்கும் நோக்கில் தொடர்ச்சியான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது. அந்தவகையில் வடக்குக்கிழக்கிலுள்ள முன்பள்ளி இணைப்பாளர்களுக்கான கருத்தமர்வொன்று கடந்த புதன்கிழமை காலை 8.30 மணியளவில் மன்னார் குடும்ப உளவளத்துணை நிலையத்தில் முன்பள்ளிக் கல்விமேம்பாட்டு நிலையத்தின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் செல்வி.கௌரிஸ்வரி தலைமையில் இடம் பெற்றுள்ளது.

ஆரம்ப நிகழ்வாக மங்கல விளக்கேற்றப்பட்டதைத் தொடர்ந்து தமிழர் புனர்வாழ்வுக்கழகக் கொடி, முன்பள்ளி கல்விமேம்பாட்டு நிலையக்கொடி என்பன ஏற்றிவைக்கப்பட்டன. வரவேற்புரை, ஆசியுரை பவற்றினையடுத்து இக்கருத்தமர்வின் முக்கியத்துவம் தொடர்பாக வருகை தந்திருந்த பிரமுகர்கள் விரிவாக எடுத்து விளக்கியிருந்தனர். ஆசியுரையை வழங்கிய உளவளத்துணை இயக்குனர் பங்குத் தந்தை அருட்திரு விக்ரர் சூசை அவர்கள் தனது உரையில் “எமது சிறார்கள் மிகுந்த முக்கியத்துவமுடையவர்கள். அவர்களே நாளைய எமது தலைவர்கள்” எனக் குறிப்பிட்டார். அவரையடுத்து கருத்துரை வழங்கிய தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மன்னார் மாவட்டப் பணிப்பாளர் திரு.கேசவன் குறிப்பிடுகையில் “வழிநடத்தும் முன்பள்ளி ஆசிரியர்கள் சகல துறைகளிலும் திறமையுள்ளவர்களாக இருக்கவேண்டும்”. எனக் கூறினார். மன்னார் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் உரையாற்றுகையில் முன்பள்ளிக் கல்வி மேம்பாடு பற்றியும், கல்வி வலயத்தோடு இணைந்து மேற்கொள்ளப்படும் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தின் செயற்பாடுகள் குறித்தும் கருத்துத் தெரிவித்தார்.

# துணுக்காயில் பொது நோக்கு மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டப் பெற்றது

(துணுக்காய்)

துணுக்காய் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஒத்துழைப்புடன் நிகொட் நிறுவன நிதியுதவியோடு பொது நோக்கு மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டு விழா கடந்த புதன் கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் கி.கணபதிப்பிள்ளை தலைமையில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் பொது நோக்கு மண்டபத்திற்கான அடிக்கல்லினை துணுக்காய்ப் பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் து.ரவிகரன் நாட்டி வைத்தார்.முன்னதாக மங்கலவிளக்கினை துணுக்காய்ப் பிரதேச உதவித்திட்டப் பணிப்பாளர் திருமதி சா.சிறிஸ்கந்தராசா, ந.தனபாலசிங்கம், கிராமசேவையாளர், இ.சண்முகநாதன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். நிகழ்வில் கிராம அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள் துறைசார்ந்தவர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (24)

# வீரவணக்கக் கூட்டமும் நினைவுக்கல் திரைநீக்கமும்

(அலுவலக செய்தியாளர்)

கடந்த செவ்வாய்க்கிழமை பிரமந்தனாறு அ.த.க பாடசாலையில் வீரவேங்கை அன்பரசன் அவர்களின் வீரவணக்க நிகழ்வு இடம் பெற்றது.

விசுவமடு மாவீரர் துயிலுமில்லப் பொறுப்பாளர் சீத்தராம் தலைமையில் நடைபெற்ற வீரவணக்க நிகழ்வில் முதன்மை பொதுச் சுடரினை கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் ஏற்றிவைக்க மாவீரர் வீரவேங்கை அன்பரசனின் திருவுருவப்படத்திற்கான ஈகச் சுடரினை மாவீராரின் சகோதரியான போராளி ஒளிச்சுடர் ஏற்றி வைத்தார். திருவுருவப்படத்திற்கான மலர் மாலையினை அன்னாரின் சகோதரன் சந்திரன் அணிவித்தார்.

தொடர்ந்து பிரமந்தனாறு அ.த.க. பாடசாலை துணை முதல்வர் செபரத்தினராசா வீரவணக்க உரை நிகழ்த்தினார்.

திரைப்பட வெளியிட்டுப்பிரிவு பொறுப்பாளர் ராதா வீரவணக்க உரை நிகழ்த்துகையில் மக்கள் தொடர்ந்தும் அழிந்து கொண்டிருப்பதனை தொடர்ந்தும் பார்த்துக் கொண்டிருக்க முடியாதென முடிவெடுத்து தேசியத் தலைவரின் பாதையில் சென்று தமிழ் மக்களின் உயிர்களை பாதுகாக்கப் புறப்பட்டு தன்னுயிரை ஈந்தவர் வீரவேங்கை அன்பரசன் எனத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இந்த மாவீரர்களின் தியாகத்தின் மூலந்தான் இன்று நாம் பலமான நிலையில் நிற்கின்றோம். இந்த மாவீரனின் சகோதரனும் ஒரு மாவீரன், சகோதரிபோராளி இவர்களின் இலட்சியப் பாதையில் நாம் ஒவ்வொருவரும் தொடர்ந்து தமிழீழ கனவை நனவாக்குவோம் என அனைவரும் உறுதி பூணுவோம் எனவும் தெரிவித்தார்.

அடுத்து அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் திருவுருவப்படம் விசுவமடு மாவீரர் துயிலுமில்லத்திற்கு எடுத்துவரப்பட்டு துயிலுமில்லத்தில் நினைவுக்கல் திரைநீக்கம் செய்து வைக்கப் பெற்றது. (சோ)

# புதுக்குடியிருப்பு காவல்துறையினரால் வீதி ஒழுங்குக் கண்காணிப்பு நடவடிக்கை

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு பிரதேசத்திலும் அதனை அண்டிய பகுதிகளிலும் வீதிப்போக்குவரத்து நடைமுறைகளை மீறுவோர் மீது புதுக்குடியிருப்பு காவல்துறையின் போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவினர் சட்ட நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கென புதுக்குடியிருப்பு காவல்பணிமனையினர் விசேடமாக ஓர் பணிமனை திறந்து போக்குவரவு கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

முல்லைத்தீவு பரந்தன் வீதியில் ஆகக்கூடியவேகம் 50 கி.மீ ஆகும். பாடசாலைகள், வைத்திய சாலைகள் உள்ள இடங்களில் ஆகக்கூடியவேகம் 30கி.மீ ஆகும். மேலும் கைவேலி தொடக்கம் மந்துவில் சந்தி வரையும் ஆகக்கூடிய வேகம் 40 கி.மீஆகும். இந் நடைமுறைகளை அனைவரையும் கடைப்பிடிக்கும் படியும் அவர்கள் கேட்டுள்ளனர்.

இதனை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.(08)

# வட்டுவாகலில் பேருந்து தரிப்பிடம் திறந்து வைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் சுனாமியால் சாவடைந்த அன்னலிங்கம்-சொர்ணலிங்கம் நினைவாக கனடாவில் வாழும் அவரது நண்பரான ஜெயசிங் கம் என்பவரால் வட்டுவாகலில் நிர்மாணிக்கப்பட்ட பேருந்துத் தரிப்பிடக் கட்டடம் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம் என்பவரால் கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப்‘பட்டது.

இந்நிகழ்வு வட்டுவாகல் கிராம அபிவிருத்திச் சங்கத் தலை வர் கணேசமூர்த்தி தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வு கடற்புலிகளின் துணைத்தளபதி செழியன், கடற்புலிகளின் முல்லைமாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் மா.றங்கன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் பொதுமுகாமையாளர் சிவலிங்கம் மற்றும் சமாசத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை, கட்டட நிர்மாணத்திற்கான நிதியுதவியை வழங்கிய ஜெயசிங்கம் , அன்னையர் முன்னணியைச் சேர்ந்த சகிலா ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர். (20)

# கூட்டம்

(அலுவலக செய்தியாளர்)

நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களிற்கான உளவளத்துணை செயற்பாட்டுக் கூட்டம் இன்று காலை 10.00 மணிக்கு அருட்திரு கனகரட்னம் தலைமையில் வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தில் நடைபெறவுள்ளது. (சோ)

# வலய மட்ட தமிழ்த்தினப் போட்டி

(முல்லை வலயம்)

முல்லைத்தீவுகல்வி வலய, வலய மட்ட தமிழ்த்தினப் போட்டிகள் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் 19 ஆம் திகதி அன்று ஆசிரிய ஆலோசகர் பொ.இராமநாதனின் தலைமையில் இடம் பெற்றது. இதில் மங்கல விளக்கேற்றல், தேசியக்கொடியேற்றலுடன் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ.சிவராசா அவர்களின் ஆசியுரையுடன் முதலாம் நாள் நிகழ்வுகளான எழுத்தாக்கப் போட்டிகள், இசையும் அசைவும், இசை நிகழ்வுகள் என்பன இடம் பெற்றன. இரண்டாம் நாள் நிகழ்வுகள் முள்ளியவளை வித்தியானந்தாக்கல்லூரியில் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் அவர்களின் ஆசியுரையுடன் நடனம், வில்லுப்பாட்டு, விவாதம், தமிழறிவு, வினாவிடைப்போட்டி, நாடகம், நாட்டுக் கூத்து போன்ற நிகழ்வுகள் இடம் பெற்றன. போட்டிகளின் அடிப்படையில் மு/வித்தியானந்தாக்கல்லூரி 82 புள்ளிகளையும், மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி 58 புள்ளிகளையும் ,முல்லைத்தீவு மகாவித்தியாலயம்51 புள்ளிகளையும் பெற்றன.

(08)

# மண்டைதீவில் கடற்படையினரின் செயற்பாட்டால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரும் பாதிப்பு!

## கட்டுப்படுத்துமாறு பொதுஅமைப்புக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

**மண்டைதீவுப் பகுதியில் மக்களின் அன்றாட இயல்பு வாழ்க்கைச் செயற்பாடுகளுக்கு தடையாகவிருக்கும் கடற்படையினரின் செயற்பாடுகளை கட்டுப்படுத்தி உதவுமாறு கோரி மண்டைதீவு பகுதியைச் சேர்ந்த பொது அமைப்புக்கள் பலவும் இலங்கை மனிதஉரிமைகள் ஆணைக்குழுவிடமும், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடமும் முறையிட்டுள்ளன.**

கடற்படையினரின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் மண்டைதீவுப் பகுதியில் மீளக்குடியமர்ந்து வரும் மக்களின் மீதான கடற்படையின் கெடுபிடிகள் தொடர்ந் துள்ளன. 1990 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் யாழ். கோட்டைமுகாமில் நிலைகொண்டிருந்த படையினர் மீதான புலிகளின் முற்றுகையை அடுத்து சிறிலங்காப்படைகள் தீவகத்தினுள் முன்னேற்ற நடவடிக்கையொன்றினை மேற்கொண்டிருந்தன.

இவ் இராணுவ நடவடிக்கையின் போது மண்டைதீவுப் பகுதியைச் சேர்ந்த சுமார் நூற்றிற்கும் அதிகமான பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டு அப்பகுதிகளிலுள்ள கிணறுகளுள் போடப்பட்டிருந்தனர். இவ் அசம்பாவிதங்களை யடுத்துமுற்றாக இடம்பெயர்ந்திருந்த அப்பகுதி மக்கள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் படிப் படியாக மீளக்குடியேறிவருகின்றனர்.

சுமார் ஆயிரத்துக்கும் அதிகமான இடம் பெயர்ந்த மக்கள் மண்டைதீவுப்பகுதியில் இதுவரை குடியமர்ந்த போதிலும் அவர்களுக் கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி வழங்க கடற்படை தடுத்து வருகின்றது. குறிப்பாக கையடக்கத் தொலைபேசிகளையோ, ஏனைய தொலைபேசி வசதிகளையோ பயன்படுத்து வதற்கு கடற்படைஇங்கு தடைசெய்துள்ளது.

இதேவேளை இங்கு மீளக்குடியமர்ந்துள்ள மக்களை இரவு வேளையில் நடமாட அனுமதி மறுத்துவரும் படையினர் மறுபுறத்தே மண்டைதீவின் பெருமளவு கரையோரப் பகுதி களையும் பொதுமக்களது பயன்பாட்டுக்குத் தடைசெய்துள்ளனர்.

அத்துடன் அங்கு மீளக் குடியமர்ந்துள்ள குடும்பங்களைச் சந்திக்கவரும் உறவினர்கள் மற்றும் நண்பர்களை இராணுவத் தடை முகாம் களில் வைத்து அனுமதிக்கமறுத்துவரும் படைத்தரப்பு உரிய அனுமதியட்டையினைப் பெற நிர்ப்பந்திப்பதாகவும் கூறப்படுகின்றது.(27)

## இளைஞனை காணவில்லை; மனித உரிமைக் குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

வீட்டிலிருந்து புறப்பட்டு வேலைக்குச் சென்ற இளைஞன் ஒருவன் காணாமல் போயுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண அலுவலகத்தில் முறையிடப்பட்டுள்ளது.

உரும்பிராயைச்சேர்ந்த பா. பிரதீபன் (வயது-22) என்ற இளைஞனே இவ்வாறு காணாமல் போயிருப்பதாக முறையிடப் பட்டுள்ளது.

கடந்த ஒன்பதாம் திகதி உரும்பிராயிலுள்ள தன் வீட்டிலிருந்து வேலைக்குச் செல்வதாகக் கூறிச் சென்ற இளைஞன் இது வரை வீடு திரும்பவில்லையென அவரது உறவினர்களால் செய்யப்பட்ட முறைப்பாட்டில் தெரிவிக் கப்பட்டுள்ளது. (33)

## வண்ணார்பண்ணையில் 30 வீடுகள் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணைப் பகுதியில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 30 வீடுகள் புதிதாக நிர்மாணிக்கப் படவுள்ளன.கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வரும் குடும்பங்களின் நலனைக் கவனத்தில் கொண்டேஇவைஅமைத்துக் கொடுக்கப் படவுள்ளன. (33)

## 110 கட்டு மரங்கள் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். வடமராட்சி கற்கோவளம் பகுதியில் சுனாமி ஆழிப்பேரனர்த்தங்களால் பாதிக் கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினரால் 110 கட்டு மரங்கள் வழங்கப்படவுள்ளன.

சுனாமி அனர்த்தத்தின் காரணமாகத் தமது கடற்றொழில் உபகரணங்களை இழந்த கடற் றொழிலாளர்களது தொழில் நடவடிக்கையை மேம்படுத்தும் நோக்குடனேயே இக்கட்டுமரங்கள் வழங்கப்படவுள்ளன. இதில் வழங்கப்படவுள்ள ஒவ்வொரு கட்டு மரங்களும் தலா இருபதாயிரம் ரூபா பெறுமதியுடையவையெனவும் தெரி விக்கப்பட்டுள்ளது. (33)

-கடற்றொழிலுக்கு அனுமதியட்டை நடைமுறை-

## படையினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க கடற்றொழிலாளர் சங்கங்கள் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில்கடற்றொழிலிற்கான அனு மதியட்டை நடைமுறைகளை அமுல்படுத்த முற்படும் படைத்தரப்பிற்கு எதிராகச் சட்ட ரீதி யான நடவடிக்கைகளை எடுக்க கடற்றொழி லாளர் சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

இதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களது உதவியுடன் பிரபல சட்டத்தரணியொருவரை அமர்த்தவும் இச்சங்கங்கள் முற்பட்டுள்ளன.

குறிப்பாக கடந்த ஆண்டின் இறுதியில் ஏற்பட்ட சுனாமி கடல் கொந்தளிப்பினையடுத்து யாழ்.குடாநாட்டிலும் கடற்றொழில் பெரிதும் முடங்கிப்போயிருந்தது. எனினும் தற்போது கடற்றொழில் படிப்படியாக சுமுக நிலையினை அடைந்து வருகின்ற நிலையில் படைத்தரப்பு இத்தொழிலில் ஈடுபடுவோர் புதிதாக படையினரின் அனுமதியட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு வலியுறுத்தி வருகின்றது.

ஆயினும் படைத்தரப்பின் இக்கெடுபிடிகளை ஏற்றுக்கொள்ள மறுத்துவரும் கடற்றொழி லாளர்சங்கங்கள் இவ்விடயம் தொடர்பாக போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவிற்கும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கும், முறைப்பாடுகளை செய்துள்ளன.

எனினும் அனுமதியட்டை நடைமுறைகள் தொடர்பான தனது நிலைப்பாட்டில் மாற்றஞ் செய்ய படைத்தரப்பு முன்வராத நிலையிலேயே படைத்தரப்பிற்கெதிராக யாழ். மேல் நீதிமன்றில் வழக்கொன்றைத் தாக்கல் செய்ய கடற் றொழிலாளர் சங்கங்கள் தற்போது முற் பட்டுள்ளன.

இது பற்றி கருத்துத் தெரிவித்த வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாச செயலாளர் சூரியகுமாரன் எந்தவாறான சட் டத்தின் கீழ் இவ்வாறான அனுமதியட்டை நடைமுறைகளை படைத்தரப்பு அமுல்படுத்தி வருகின்றது. என்ற உண்மை அப்போதே வெளி வருமென்றார். (27)

## "பூவரசம் வேலியும் புலுனிக்குஞ்சுகளும்" யாழில். இன்று நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கவிஞர் புதுவை இரத்தினதுரையின் "பூவரசம் வேலியும் புலுனிக்குஞ்சுகளும்" என்ற கவிதைத் தொகுப்பு நூலின் வெளியீட்டுவிழா இன்று பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதி தலைமையில் நடை பெறவுள்ள இவ்வெளியீட்டு விழாவில் தமிழீழ அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் சு.மோகனதாஸ் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள், பேராசிரியர்கள், போராளிகள், மாணவர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (33)

## யாழ்ப்பாணம்-கிளிநொச்சி மாவட்டங்களின் அபிவிருத்தி திட்டங்கள் குறித்து ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழப்பாண தேர்தல் மாவட்டத்தில் கிளி நொச்சி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கி 2005,2006 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்படவுள்ள அபி விருத்தித் திட்டங்கள், அதற்கான நிதி ஒதுக் கீடுகள் என்பன குறித்து ஆராயப்படவுள்ளன.

இது தொடர்பான அபிவிருத்திக் குழுக் கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி முற்பகல் 10.?0 மணிக்கு யாழ்ப்பாண மாவட்ட அரச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் அபிவிருத்திக் குழுத்தலைவரும் பாராளுமன்ற உறுப்பின ருமான மாவை சேனாதிராஜா தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் மற்றும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், சிவநேசன் கஜேந்திரன், கஜேந் திரகுமார், ஈழவேந்தன் சுரேஸ்பிரேமச்சந்திரன், பத்மினிசிதம்பரநாதன், ரவிராஜ் ஆகியோர் கலந்து; கொள்ளவுள்ளனர். (33)

## மணல் அகழ்வோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ். தென்மராட்சிப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் மணல் அகழ்வோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகளை எடுக்குமாறு யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் உத்தரவிட்டுள்ளார்.

தென்மராட்சிப் பகுதியிலுள்ள கச்சாய், வரணி, மட்டுவில், மந்துவில், சாவகச்சேரி போன்ற பகுதிகளில் தொடர்ச்சியாக சட்ட விரோத மணல் அகழும் நடவடிக்கைகள் இடம் பெறுகின்றன. இதனால் அப்பகுதி விவசாய நிலங்களும், குடியிருப்பு நிலங்களும் பாவனைக்கு உதவாதவையாகிவிடுகின்றன.

எனவே விரைந்து இத்தகைய சட்டவிரோத மணல் அகழ்வைக் கட்டுப்படுத்துவதற்கான நட வடிக்கைகளை எடுக்கவேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், பிரதேச செயலாளர்கள், கிராம சேவகர்கள், பொலிசார் உட்பட சம்பந்தப்பட்ட தரப்பினர் அனைவரும் இணைந்து இதற்கு எதிரான நடவடிக்கைகளை எடுக்கவேண்டு மெனவும் வலியுறுத்தியுள்ளார். (33)

## 90 வீடுகள் அமைப்பு

(நல்லூர்)

யாழ்.நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவிற்குட் பட்ட பகுதிகளில் 90 வீடுகளை அமைத்துக் கொடுக்க உலக வங்கி முன்வந்துள்ளது.

இவ்வீடுகளில் 72 வீடுகள் புதிதாக நிர் மாணிக்கப்படவுள்ளதுடன், 18 வீடுகள் புனரமை த்து மீள்நிர்மாணம் செய்யப்படவுள்ளன. (33)

## 40 ஆரம்பப்பாடசாலைகளில் போசாக்குத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்விவலயத்துக்குட்பட்ட பகுதிகளிலுள்ள 40 ஆரம்பப் பாடசாலைகளில் போசாக்குத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.செல்வராஜா தெரிவித்துள்ளார்.

இந்த ஆரம்பப்பாடசாலை மாணவர்களுக்கான இலவசப் போசாக்கு உணவுத்திட்டம் அடுத்த தவணை ஆரம்பத்திலிருந்து நடைமுறைக்கு வருமென அவர்மேலும் தெரிவித்துள்ளார்.

யாழ்.கல்விவலயத்துக்குட்பட்ட பிரதேச பாடசாலைகளில் பயின்றுவரும் ஆரம்பப்பிரிவு மாணவர்களிடையே நிலவுகின்ற போசாக்கு இன்மைகளைக் கவனத்தில் கொண்டே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

போசாக்கு இன்மையால் பாதிக்கப்பட்டுள்ள வறி மாணவர்களின் நலனுக்கான இத் திட்டத்தில் அரியாலை, இருபாலை,கோண்டாவில் போல பகுதிகளிலுள்ள 40 பாடசாலைகள் உள்வாங்கப்படுமென யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் செல்வராஜா தெரிவித்தார். (33)

## பண்ணைப்பாலம் மீண்டும் சேதம்; போக்குவரத்தில் பயணிகளுக்கு சிரமம்

(நல்லூர்)

யாழ்.பண்ணைப்பாலம் மீண்டும் பழுதடை ந்தமையால் தீவகத்திற்கான போக்குவரத்து எந்த நேரத்திலும் துண்டிக்கப்படலாம் என்ற அவல நிலை காணப்படுகின்றது. கடந்த பல வருடங் களுக்கு மேலாக இப்பாலம் பழுதடைந்துள்ள போதிலும் இதனைச் சீரான முறையில் திருத்தியமைப்பதற்கு வேண்டிய ஒழுங்குகளை வீதி அபிவிருத்தி அதிகாரசபை மேற்கொள்ள வில்லை.

இதேநேரம் காலத்திற்குக்காலம் இதனைத் தற்காலிகமான திருத்த செயற்பாடுகளை மேற் கொண்டு வந்தனர். தற்போது தீவகத்திற்கு வாகனங்களில் செல்லு பயணிகள் பாலத்திற்கு அண்மையாக வாகனத்திலிருந்து இறங்கி நடந்து சென்று மீண்டும்ஏறிச்செல்லும் அவலநிலை மையும் காணப்படுகின்றது. (41)

# குரலறியும் மென்பொருள் பேச்சை எழுத்தாக மாற்றித்தருகிறது

'ஸ்பீச் ரெக்னைசன் என்ஜின்' எனப்படும் குரலறி மென் பொருள் மூலம் மைக்ரோ போனை உபயோகித்து கம்பியூட்டருக்கு நமது குரலை உள்ளீடு செய்யலாம். நாம் பேசுவதைப் புரிந்து அதனை எழுத்தாக மாற்றித் தருகிறது இம்மென்பொருள். அதேபோல வொய்ஸ் கமான்ட் மோடில் குரல் வழி கட்டளை மூலம் மெனுக்களைத் திறந்து அதில் தெரிவுகளை மேற் கொள்ளவும் முடிகிறது. ட்ரேகன், டிக்டேட் என்பன முதன் முதலில் வந்த குரலறி மென்பொருள் களாகும். அப்போது அவற்றில் டெக்ஸ்ட் மோடில் ஒரு வார்த்தையை உச்சரித்த பிறகு நிறுத்தி அடுத்த வார்த்தையை உச்சரிக்க வேண்டியிருந்தது. எனினும் தற்போது அக்குறைகள் அனைத்தும் களையப்பட்டு வார்த்தைகளுக்கிடையில் நிறுத்தம் செய்யாமல் ஒரு வாக்கியத்தையோ சொற்றொடரையோ கம்பியூட்டரால் புரிந்துகொள்ளக் கூடியதாக மேம்படுத்தப்பட்டுள்ளது.

எம்.எஸ்.ஒபிஸ் தொகுப்பிலும் இவ்வசதி தற்போது இணைக்கப்பட்டுள்ளது. எம்.எஸ். ஒபிஸ் தொகுப்பின் புதிய பதிப்பான ஒபிஸ் எக்ஸ்பீயில் குரலறி மென்பொருளானது இணைந்தே வருகிறது. அத்துடன் விண்டோஸ் எக்ஸ்பீயிலும் இணைக்கப்பட்டுள்ளது. நாம் தட்டச்சு செய்ய வேண்டிய விடயங்களை இனிமேல் கை வலிக்க தட்டச்சு செய்ய வேண்டிய அவசியமில்லை. மைக்ரோ போன் மூலம் வாசித்தால் போதும். அதனைப் புரிந்து எழுத்துகளாக மாற்றித் தருகிறது. இதனை எம்.எஸ். வேர்டில் ஒரு முறை செட்டப் செய்து கொண்டால் ஏனைய ஒபீஸ்புரோக்கிராம்களிலும் பயன்படுத்திக் கொள்ளலாம். கீபோர்டை உபயோகித்து டைப் செய்ய சிரமப்படுவோருக்கும் எழுத்துப் பிழையின்றி எழுதுவதில் சிரமத்தை எதிர்நோக்குவோருக்கும் இது ஒரு வரப்பிரசாத மாகும். எனினும் இவ்வசதி தற்போது ஒபிஸ் எக்ஸ்பியின் ஆங்கில, ஜப்பானிய மற்றும் சீன மொழிப் பதிவுகளில் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. தமிழிலும் இவ்வசதி வரும் நாள் தொலைவில் இல்லை.

* உங்கள் குரலை கம்பியூட்டருக்கு ஒருமுறை பயிற்றுவித்தால் போதும். அவ்வாறு பயிற்றுவிக்கும் போது முதலில் மைக்ரோபோனைச் சரி செய்துகொள்ள வேண்டும். பேசும் போது அதிக சத்தமிட்டோ அல்லது மிக மென்மையாகவோ பேசுதல் கூடாது. அத்துடன் கம்பியூட்டர் இருக்கும் அறையினுள் பிறசத்தங்கள் புகாதவாறு அமைதியான சூழலில் பயிற்றுவித்தல் வேண்டும். இல்லையேல் எதிர்பார்த்த பலனைப் பெற முடியாது. இந்தப் பயிற்சிக்கு 10 முதல் 15 நிமிடங்கள் வரை எடுக்கலாம்.இவ்வசதியைப் பெற உங்களுக்குத் தேவையானது.

400 MHz இற்கு மேற்பட்ட ப்ரோசெஸ்ஸர்

128MB நினைவகம்(RAM)

விண்டோஸ் 98 அல்லது அதற்குப்பிந்திய பதிப்பு ஒரு தரமான மைக்ரோபோன் அல்லது ஹெட்செட்.

அத்துடன் எம்.எஸ் ஒபிஸ் எக்ஸ்பீ நிறுவியிருத்தல்.

ஒபிஸ் எக்ஸ்பீயை முழுமையாக நிறுவும் போதே எஸ்.ஆர். என்ஜினும் நிறுவப்படும். எஸ்.ஆர்.என்ஜினும் நிறுவப்படாதிருந்தால் பின்வரும் வழிமுறையில் நிறுவிக்கொள்ளலாம்.

1.கன்ரோல் பனலில் அன்ட் ரிமூவ் ப்ரோக்ரம்ஸ் திறந்து கொள்ளவும்.

2.Change or remove programs க்ளிக் செய்யுங்கள்.

3.மைக்ரோசொப்ட் ஒபிஸ் எக்ஸ்பியில் க்ளிக் செய்யவும். . பிறகு Change இல் க்ளிக் செய்யுங்கள்.

4.Add/remove features இல் க்ளிக் செய்யவும். பிறகு நெக்ஸ்ட் க்ளிக் செய்யுங்கள்.

5.Features to install என்பதன் கீழ் office shared features என்பதை இரட்டை க்ளிக் செய்யவும்.

Alternative User input என்பதை இரட்டை க்ளிக் செய்யுங்கள். பிறகு Speech க்ளிக் செய்யவும். கீழ் நோக்கிய அம்புக்குறியில் க்ளிக் செய்து அதில் Run from my computer தேர்வு செய்யவும். பிறகு update பட்டனில் க்ளிக் செய்யுங்கள்.

இப்போது எவ்வாறு குரலைப் பயிற்றுவிப்பது எனப் பார்ப்போம். முதலில் எம்.எஸ். வேர்டைத்திறந்து கொள்ளுங்கள். வேர்ட் விண்டோவில் மெனுபாரில் உள்ள Tools மெனுவில் Speech தெரிவு செய்யுங்கள். அப்போது Wel come to office Speech Recognition Wizard தோன்றும். இதில் நெக்ஸ்ட் க்ளிக் செய்ய Microphone Wizard-WelCome டயலொக் பொக்ஸ் தோன்றும். மீண்டும் நெக்ஸ்ட் க்ளிக் செய்ய Test Microphone டயலொக் பொக்ஸ் தோன்றும். அதில் "I am using the Microphone wizard It is adjusting the volume of my microphone" வசனத்தை முழுமையான குரலில் வாசிக்கவும். அப்போது வொலியும் மீற்றர் அசைவதைக் காணலாம். வொலியும் மீற்றரானது பச்சை நிறப் பகுதிக்குள் இருக்குமாறு உங்கள் குரலில் ஏற்ற இறக்கத்தைச் சரிசெய்து கொள்ளவும். அடுத்து வரும் டயலொக் பொக்ஸ்ஸானது ஹெட்செட் வைத்திருப்பவர்களுக்கு மாத்திரமே. அதனால் மைக்ரோ போனைப் பாவிப்பவர்கள் Finish பட்டனில் க்ளிக் செய்து விடலாம்.ஹெட்செட் வைத்திருப்பவர்களானால் அதிலுள்ள வசனத்தை சத்தமிட்டு வாசித்தல் வேண்டும். பின்னர் அது பதிவு செய்யப்பட்டு மீண்டும் உங்கள் காதில் எதிரொலிக்கும். மைக்ரோ போனில் ஊதுவது போன்ற ஒலி எழுப்பினால் மைக்கைசரிசெய்து Finish பட்டனில் க்ளிக் செய்யவும்.

அடுத்ததாக உங்கள் குரலை ஒபிஸுக்குப் பயிற்றுவிப்பதற்கான விசர்ட் தோன்றும். இதில் நெக்ஸ்ட் க்ளிக் செய்யவரும் ஸ்பீச் புரோபைலை நிரப்பவும். பேசுவது ஆணா பெண்ணா மற்றும் எவ்வயதுக்குட்பட்டவர் ஆகிய விபரங்களைக் கேட்கும். இதில் கொடுக்கப்படும் விபரங்கள் குரலறியும் மென்பொருள் சிறப்பாக செயலாற்ற உதவும். இங்கு பொருத்தமானதைத் தேர்வு செய்து நெக்ஸ்ட் க்ளிக் செய்யவும். அப்போது சில அறிவுறுத்தல்களைக் கொண்ட ஒரு டயலொக் பொக்ஸ் தோன்றி அடுத்து வரவிருக்கும் கட்டங்களில் எவ்வாறு பயிற்சி மேற்கொள்ளல் வேண்டும் என்பது போன்ற விபரங்களைக் காட்டும். அத்துடன் எவ்வாறு பேச வேண்டும் என்பதைக் காட்டும் மாதிரி வாக்கியமும் இருக்கும். இப்போது நெக்ஸ்ட் க்ளிக் செய்ய மைக்கை ஒழுங்காகச் சரிசெய்து கொள்ளும்படி சொல்லும். அடுத்து நெக்ஸ்ட் க்ளிக் செய்ய Voice Training டயலொக் பொக்ஸ தோன்றும்.

அதிலுள்ள வாக்கியங்களை வழமையான குரலில் உரக்க வாசித்து நெக்ஸ்ட் க்ளிக் செய்ய வேண்டும். கட்டம் கட்டமாக வரும் அனைத்து வாக்கியங்களையும் வாசித்து முடித்த பின்னர் sriengine உங்கள் குரல் வடிவம், சொற்களைப் பிரிக்கும் விதம் போன்ற விபரங்களை ஒரு பைலில் சேமித்து வைக்கும். இறுதியாகத் தோன்றும் கட்டத்தில் ஸ்பீச் ரெக்னிசனில் ஆரம்பத்திலேயே முழுமையான, திருத்தமான விளைவை எதிர்பார்க்க முடியாது என்பதையும் முன்கூட்டியே சொல்லிவைக்கும். இப்போது பினிஸ் பட்டனில் க்ளிக் செய்யவும்.

அடுத்து ஒரு வீடியோ பைல் இன்டனெட் எக்ஸ்ப்ளோரரில் திறக்கப்படும். குரலறி மென்பொருளை எவ்வாறு பயன்படுத்தல் வேண்டும் போன்ற விவரங்களை அதில் பார்க்கலாம். பிறகு அதனை குளோஸ் செய்து விட்டு டிக்டேட் செய்ய ஆரம்பிக்கவும். இப்போது வேர்ட விண்டோவின் மேல் Language Bar தோன்றியிருப்பதைக் காணலாம். லாங்குவேஜ் பாரிலுள்ள பட்டன்கள் மூலம் டிக்டேசன் மோடிலும், வொய்ஸ் கமான்ட் மோடிலும் மாறிக்கொள்ளலாம்.

இப்போது வேர்டில் ஒரு புதிய டொகுயுமென்டைத் திறந்து லாங்வேஜ் பாரில் டிக்டேசன் ஐக்சனில் க்ளிக் செய்யவும் அல்லது 'டிக்டேசன்' என மைக்ரோ போனில் சொல்லவும். இப்போது டிக்டேட் செய்வதற்கான நிலைக்கு மாறும். நீங்கள் டைப் செய்ய வேண்டியதை மைக்கில் பேசவும், பேசும் போது நீலநிறப் பின்னணியில் புள்ளிகள் நகர்வதைக் காணலாம். SR.engina வாசிப்பதைப் புரிந்துகொண்டதும் அப்புள்ளிகளை டெக்ஸ்டாக மாற்றித்தரும். எனினும் டெக்ஸ்ட் பிழைகளின்றி மிகத்துல்லியமாக இருக்காது. அவ்வப்போது கீபோர்ட், மவுஸையும் உபயோகித்து பிழைகளைத் திருத்திக் கொள்ளலாம். அனேகமாக ஆங்கிலமல்லாத சொற்களை டெக்ஸ்டாக மாற்றும் போது பிழைகள் வரலாம். டிக்டேட் செய்வதை நிறுத்த மீண்டும் 'மைக்ரோபோன்' எனச் சொல்லவும். அதேபோல் டிக்டேட் மோடிலேயே திருத்தங்களைச் செய்வதற்கு ஸ்க்ரச் தெட் என்ற கமான்டைச் சொல்ல கடைசியாக டெக்ஸ்டாக மாற்றப்பட்ட வார்த்தை அழிக்கப்படும்.

வொய்ஸ் கமான்டின் மூலம் மெனு கட்டளைகளை இலகுவில் தெரிவு செய்யலாம். உதாரணமாக மைக் மூலம் 'பைல்' என்று சொல்ல பைல் மெனு வரக்காணலாம். அதேபோல் 'சேவ்' என்று சொல்ல Save as டயலொக் பொக்ஸ் தோன்றும். தேர்வு செய்யப்பட்ட மெனுவை வேண்டாத போது 'எஸ்கேப்' என்று சொன்னால் போதும். அதேபோல் டூல்பார்களில் காணப்படும் பட்டன்களையும் இயக்கலாம். பட்டனின் பெயரை மட்டும் சொன்னால் போதும் பட்டனின் பெயர் தெரியாத போது அந்த பட்டனில் மேல் மவுஸை நகர்த்தும் போது தோன்றும் டூல் டிப்பைப் பார்த்து பெயரைச் சொல்லுங்கள். இதே போன்ற வொய்ஸ் கமான்ட்கள் ஏராளம் உள்ளன.

பேச்சை எழுத்தாக மாற்றுவது போல் நீங்கள் டைப் செய்ததை கம்பியூட்டர் வாசிக்கும்படியும் செய்யலாம். Tex t to speech எனப்படும் இவ்வசதியைப் பெற உங்கள் கணினியில் விண்டோஸ் எக்ஸ்பீ (OS) நிறுவியிருத்தல் வேண்டும். லாங்குவேஜ் பாரில் அதற்கென ஸ்பீச் என்ற பட்டன் தோன்றும். அதில் க்ளிக் செய்ய டைப் செய்யப் பட்டதைக் கம்பியூட்டர் வாசிக்க ஆரம்பிக்கும்.

ஸ்பீச் ரெக்நிசனை பாவனையில் கொண்டு வரும் போது அதனைப் பற்றி மேலும் கற்றுக் கொள்ளலாம். இதனை நீங்கள் வேர்டில் மட்டுமன்றி office package லுள்ள ஏனைய ப்ரோக்கிராம்களிலும் பயன்படுத்தலாம். குறிப்பாக எக்ஸலில் பணியாற்றும் போது இலக்கங்களை இதன் மூலம் இலகுவாக உள்ளீடு செய்துகொள்ளலாம். அத்துடன் SR engine ஐ உபயோகப்படுத்த ஒவ்வொரு முறையும்இதேபோல் செட்டப் செய்ய வேண்டியதில்லை. அடுத்தமுறை SR engine இல்பணியாற்ற, வேர்ட் விண்டோவில Tools மெனுவில் Speech க்ளிக் செய்ய லாங்குவஜ் பார் மட்டும் வரும்.



# இதுவரை தயாரிக்கப்படாத இராட்சத விமானம்

உலகில் இதுவரை தயாரிக்கப்படாத இராட்சத பயணிகள் விமானம் ஒன்று பிரான்ஸ் நாட்டில் தயாரிக்கப்பட்டு கடந்த ஏப்ரல் 27 ஆம் திகதி வெள்ளோட்டம் விடப்பட்டுள்ளது. அது தயாரிக்கப்பட்ட "டூலூஸ்" விமானம் கட்டும் நிறுவனத்தின் தளத்திலிருந்து பறக்கவிடப்பட்டுள்ளது.

"ஏயார் பஸ் A380" எனப்படும் இவ்விமானம் பிஸ்கே குடாப்பகுதியில் விமானப்பாதை வழியாக சுமார் நான்கு மணித்தியாலம் பறப்பில் ஈடுபட்டு தரையிறங்கியது. பரீட்சார்த்த பயணமாக அமைந்த இப்பயணத்தின் போது பயணிகள் பங்கேற்காத அதேவேளை விமானத்தை நிர்மாணித்தவர்களும் மேலும் ஆறு நிபுணர்களும் இப்பயணத்தை மேற்கொண்டனர்.

இரண்டு தளங்களை (மாடிகள்)கொண்ட இவ்விமானத்தில் சுமார் 555 பேர் பயணிக்கலாம். அதன் ஒரு சிறகின் நீளம் 260 அடியாகும். விமானத்தின் நீளம் 238 அடியாகும். "றோல்ஸ் றொயிஸ் ட்ரென்ட் 900 இனத்தைக்கொண்ட நான்கு இயந்திரங்கள் இதில் பொருத்தப்பட்டுள்ளன.

இவ்விமானத்தில் உணவு விடுதி, நூலகம், படுக்கையறைகள் உட்படப் பல வசதி கள் காணப்படுகின்றன. இந்த வசதிகள் இல்லாத விடத்து இதில் பயணிப்போர் தொகை 853 ஐ எட்டும் இது 560 தொன் எடையைச் சுமந்து செல்லும். விமானங்களுக்குப் பாவிக்கப்படும் பெட்றோலைவிட அதிவிசேடவகை எரிபொருளினால் இது இயங்கும். இதன் உயரம் 78 அடியாகும். சுமார் மூன்று இலட்சம் லீற்றர் எரிபொருளைச் சேமித்து வைக்கக்கூடிய தாங்கிகளும் இவ்விமானத்தில் பொருத்தப்பட்டுள்ளன. ஒருமுறை நிரப்பப்படும் எரிபொருளுடன் 15 ஆயிரம் கிலோ மீற்றர் தூரம் பறக்கும். இதனைச் சாதாரண விமான நிலையங்களில் இறக்குவது கடினமாகும். இது வெள்ளோட்டம் விடப்பட்டபோது அனைத்துப் பொறுப்புக்களும் ஜெக்ஸ் றோஸ் என்ற விமானியிடம் வழங்கப்பட்டது. தரையிறக்கும் பொறுப்பு "க்ளோட் லேலேய"என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

சில வேளைகளில் இது அனர்த்தத்திற்கு உட்பட நேர்ந்தால் விமானிகள் பாதுகாப்பாகத் தரையிறங்க பரசூட் வழங்கப்பட்டது.

தற்போது வெள்ளோட்டம் மட்டுமே நடைபெற்றுள்ளது. மேலும் பரிசோதனைகள் நடைபெறலாம். இது சுமார் 10 ஆயிரம் அடி உயரம் வரை மட்டுமே சென்றிருக்கின்றது. இது முற்றுமுழுதாக பிரான்ஸ் நாட்டினால் தயாரிக்கப்பட்டதல்ல. பிரிட்டன்,ஜேர்மனி, ஸ்பெயின் நாடுகளினதும் தொழில்நுட்ப உதவியுடனேயே இது வடிவமைக்கப்பட்டுள்ளது. தயாரிப்புச் செலவு 8.4 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்களாகும். நமது நாட்டுப் பெறுமதியில் 1680 பில்லியனாகும்.

இதன் வெள்ளோட்ட நிகழ்வைக்காண பிரான்ஸ் அதிபர் ஜக்ஷிராக், ரொனி பிளேயர், ஜெர்மனின் கர்காட் புரோடர், பிரான்சின் பிரதமர் ரொட்றிகோ பப்பனேந்திரயோர் உட்பட 50 ஆயிரத்திற்கும் அதிகமானோர் வருகை தந்தனர்.



# செல்லிடத் தொலைபேசி மூலம் இயக்கப்படும் 'றோபோ'

செல்லிடத்தொலைபேசி மூலம் பலவிதமான பணிகளைச் செய்ய முடிகிறது. அவற்றுள் ஒன்றாகச் செல்லிடத் தொலைபேசியைப் பயன்படுத்தி றோபோ ஒன்றை இயக்குவதற்கு டொஷிபா நிறுவனம் திறன்பெற்றுள்ளது.

மேற்படி தொலைபேசியின் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி றோபோவை ஆடவைக்கவும், உலாவித்திரியவும், உயரம்பாயவும் கைகால்களை அசைக்கவும் செய்யலாம்.

பொழுதுபோக்குகளில் மட்டுமன்றி வீட்டின் பாதுகாப்புக்கும் இது பயன்படும். இதில் பொருத்தப்பட்டுள்ள புகைப்படக் கருவி மூலம் பாதுகாப்புப்பணி நடைபெறுகிறது.

# போரை ஊக்குவிக்கும் சூழலை அகற்றுக!

# சர்வதேச சமூகத்திடம் வட.கிழ. ம.உ.செ. கோரிக்கை

**போரை ஊக்குவிக்கும் சூழல்கள் எல்லாவற்றையும் அகற்ற வேண்டும் என்று கிளிநொச்சியிலுள்ள வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகம் சர்வதேச சமூகத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.**

இதுகுறித்து அது வெளியிட்டுள்ள அறிக்கையில், திருகோணமலையில் திடீரெனத் தோன்றிய புத்தர்சிலை மக்களை ஆத்திரமடையச் செய்வதற்குப் பல காரணங்கள் உண்டு. முற்கூட்டிய பேச்சு எதுவும் இல்லாமல் இது திடீரென முளைத்தது. இது பௌத்தமதத்தவர்கள் அல்லாதோர் செறிந்து வாழும் பகுதியில் தோற்றம் எடுத்தது. இது தமிழ் தாயகமான வடக்கு கிழக்குப் பகுதியின் தலைநகரில் தோன்றியது.

இலங்கையின் பௌத்தமதம் ஆளும் இனத்தவரின் மேலாதிக்கப் போக்கின் முக்கிய அம்சமாக முன்வைக்கப்படுகின்றது. இக்காரணங்களால் தமிழ் மக்கள் இச்சிலை அமைத்ததை அமைதியான போராட்டம் மூலம் எதிர்த்தனர். இதைத் தொடர்ந்து தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட கொலைகளும், வன்முறைகளும் தமிழரிடையே அச்சத்தை உருவாக்கியிருக்கிறது!.

நீதிமன்றம் நகரசபையின் அனுமதி பெறுமட்டும் சிலையை தற்காலிகமாக அகற்றும்படி இட்ட உத்தரவை நிராகரித்து மாறாக இராணுவம் சிலையைப் பாதுகாப்பது தமிழரிடையே பீதியைக் கிளப்பியுள்ளது. இச்சூழல் ஒரு சிறு அசம்பாவிதத்தால நாடு முழுவதும் தமிழருக்கெதிரான வன்செயல்களைத் தொடர்வதற்குக் காரணமாக அமையலாம். இந்நிலை பல நாட்கள் நீடித்தும் இராணுவத்தால் சுமுகநிலையைக் கொண்டுவர முடியவில்லை. இச்சூழலை நீடிக்க விடுவது இயல்பு நிலையைக் கொண்டுவர வேண்டுமென்ற யுத்த நிறுத்த ஒப்பந்த அம்சத்தை மீறுவதாகும்.

இலங்கையில் அடுத்தடுத்து நடந்து வரும் நிகழ்வுகள் நாட்டை மீண்டுமொரு போருக்குத் தள்ளுகிறதென்று எமது அமைப்ட' ஆழ்ந்த கவலை கொள்கிறது. மூன்று வருடகால யுத்த நிறுத்த ஒப்பந்த காலத்தில் தொடர்ச்சியாக இதைச் சுட்டிக்காட்டும் நிகழ்வுகள் நடக்கின்றன.

ஆரம்பகால சமாதானப் பேச்சு வார்த்தைகளில் தீர்மானித்ததற்கு அமைய வடக்குக் கிழக்கு புனரமைப்புக்கான நிதியை ஒதுக்கத்தவறியமை விடுதலைப்புலிகள் புனரமைப்பைத் துரிதப்படுத்துவதற்காக சமர்ப்பித்த இடைக்கால நிர்வாக சபைத்திட்டத்தைத் தொடர்ந்து பாராளுமன்றத்தைக் கலைத்தமை, புதிதாக வந்த அரசாங்கம் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்கத் தவறியமை, விடுதலைப் புலிகள் விலக்கிய கருணாவுக்கு தொடர்ந்து அரசாங்கம் ஆதரவு வழங்கியமை, எமது அமைப்பின் உறுப்பினரான அ.சந்திரநேரு உட்பட தமிழர்கள் கிழக்கில் தொடர்ந்து கொலை செய்யப்படுவதும் கவனத்திற் கொள்ளப்படவேண்டியவை.

ஆழிப்பேரலையானது பொய்மையான இப்போக்கினை வெளிக் கொண்டுவர மேலும் உதாரணங்களைத் தந்திருக்கிறது. புனரமைப்பு வேலைக்கு பொதுக்கட்டமைப்பை உருவாக்கத்தவறியது சுனாமி சமாதானத்துக்கு வழிவகுக்கும் என்ற எண்ணத்துக்குப் பெரும் அடியாகும்.

இரு தசாப்த போரின்போது இழைக்கப்பட்ட மிகப்பாரதூரமாக மனித உரிமை மீறல்கள் இன்னமும் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மனித உரிமை மீறப்பட்டோருக்கும் அவரின் உறவினருக்கும் இதுவரை நீதி கிடைக்கவில்லை. வடக்கு-கிழக்கு மனித உரிமைகள் செயலகம் அதன் ஒருவருட காலசேவையின் போது மனித உரிமைகள் மீறப்பட்ட மக்களின் வேதனையை நேரே கண்டறிந்தது.

செயலகம் அதன் செயற்பாடுகள் மூலம் மக்களுக்கு இனி விடிவுவரும் என்ற ஒரு நம்பிக்கையைக் கொடுத்திருந்தது. இனியும் போர் தொடங்கினால் இந்த நம்பிக்கை என்னாவது.

ஆழிப்பேரலை அழிவுக்கு முன்பு இலங்கை மிகமோசமான ஒரு பொருளாதார நிலைக்கு முகம்கொடுக்க வேண்டியிருந்தது. சர்வதேச சமூகம் இலங்கைக்குக் கொடுக்கும் ஆழிப்பேரலை உதவியாக சகல கடன்களையும் தள்ளுபடி செய்துள்ளது. இதனால் பொருளாதார நெருக்கடி தவிர்க்கப்பட்டுள்ளது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மக்கள் முன்னெப்போதும் இல்லாத ஒரு இயற்கை அழிவைச் சந்தித்திருக்கும் இந்நேரத்தில் இலங்கை அரசாங்கம் தனது இராணுவ வளத்தைப் பெருக்கத் தாராளமாக செலவு செய்து வருகின்றது.

மேலும் வழங்கப்படும் ஆழிப் பேரலைக்கான நிதியுதவிகளும், மறைமுகமான இராணுவ உதவியாகவே இருக்கும்.

சமாதான முயற்சிகள் வெற்றியடையும் என்று நம்பிக்காத்திருக்கும் காலம் கடந்துவிட்டது. இலங்கை மீண்டும் போரைநோக்கிப் போகிறது என்பது தெளிவாகத் தெரிகின்றது.

இந்தப் போக்கை நிறுத்துவதற்கு உறுதியான நடவடிக்கைகளை உடன எடுக்காவிட்டால் காலம் கடந்துவிடும். போரைத்தூண்டும் சகல சூழல்களையும் நீக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு நாட்டையும், உலகையும் வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகம் தூண்டுகிறது.

சர்வதேச மனித உரிமைகள் சமூகம் போரைத் தவிர்க்க தூரநோக்குடன் தமிழரின் அடிப்படை உரிமைகளை முன்வைத்து நாட்டில் மனித உரிமை மேம்பாட்டிற்காக செயலாற்ற வேண்டும்.

எமது செயலகம் நிதிவழங்கும் சமுகங்களுக்கு அவர்களால் இலங்கைக்கு வழங்கப்படும் நிதி உதவிகளைக் கட்டுப்படுத்தவும், மேற்பார்வை செய்யவும் வேண்டுகோள் விடுக்கும் அதேநேரத்தில் ஆயுத விற்பனை செய்யும் நாடுகளுக்கும் அவற்றிற்கான விற்பனைத்தடையையும் விதிக்குமாறு வேண்டுகோள் விடுகின்றது.

## சுற்றுலாப் பயணியின் உந்துருளி திருட்டு

(கொழும்பு)

ஜேர்மனியிலிருந்து சிறிலங்காவிற்கு வந்த சுற்றுலாப் பயணியின் உந்துருளி நேற்று முன்தினம் ஹிக்கடுவ பகுதியில் திருட்டுப்போயுள்ளது. ஜேர்மனியிலிருந்து சுற்றுலாப் பயணிகளாக வந்த தம்பதியினர் இந்த உந்துருளியை வாடகைக்கு அமர்த்தியிருந்த வேளையே திருட்டுப்போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மேன்முறையீட்டு நீதிமன்றால் எஸ்.பி யின் மனு நிராகரிப்பு

(கொழும்பு)

உச்ச நீதிமன்றை அவமதித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சிறைத் தண்டனை அனுபவித்துவரும் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தமது பாராளுமன்ற பதவி நீக்கப்படுவதையும், வேறொருவர் அப்பதவிக்கு நியமிக்கப்படுவதனையும் தடுக்கும் உத்தரவைப் பிறப்பிக்குமாறு கோரி தாக்கல் செய்த மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிபதிகளான கே. சிறீபவன், ரஞ்சித் சில்வா ஆகியோரே இந்த மனு மீதான தீர்ப்பை நேற்று முன்தினம் அறிவித்தனர்.

எஸ்.பி.திஸாநாயக்கவினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த குறிப்பிட்ட மனுவை விசாரிப்பதற்கான அழைப்பாணை ஒன்றை விடுக்கும்படி சமர்ப்பிக்கப்பட்டிருந்த மனுவை நிராகரித்துள்ளதாக அவர்கள் தங்கள் தீர்ப்பில் குறிப்பிட்டிருந்தனர்.

இம்மனு தொடர்பாக எஸ்.பி. திஸாநாயக்க சார்பில் ஆஜராகி வாதிட்ட சனாதிபதி சட்டத்தரணி கே.எம். சொக்ஸி, நீதிமன்றத்தை அவமதிப்பது தண்டனைக்கோவைச் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமல்ல எனவும், எனவே, மனு தாரரது பாராளுமன்ற அங்கத்துவத்தை நீக்குவதற்கு சட்டத்தில் இடமில்லை எனவும் தனது வாதத்தின்போது தெரிவித்தார்.

இதேவேளை, சட்டமா அதிபரின் சார்பில் ஆஜரான பிரதி சொலிஸிஸ்ட ஜெனரல் பாலித்த பெர்னாண்டோ தனது வாதத்தின்போது, உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புத் தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மனு செய்து அதனை மாற்றுமாறு கோருவது சட்டத்திற்கு முரணான செயல் எனவும், இம்மனுவை விசாரணை செய்யும் அதிகாரம் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்குக் கிடையாது எனவும் சுட்டிக்காட்டினார்.

## இலங்கைத் தேயிலைக்கு பாகிஸ்தான் வரிவிலக்கு

இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்படும் தேயிலைக்குப் பாகிஸ்தான் வரிவிலக்களித்துள்ளது. உலகில் கூடியளவான தேயிலையைக் கொள்வனவு செய்யும் மூன்று நாடுகளுள் பாகிஸ்தானும் ஒன்றாகும். பாகிஸ்தானின் மொத்தத்தேயிலை கேள்வியில் மூன்று வீதம் மட்டுமே தற்போது இலங்கையிலிருந்து கொள்வனவு செய்யப்படுகிறது.

உலகின் தரம் வாய்ந்த தேயிலையை உற்பத்தி செய்யும் இலங்கையின் தேயிலைக்குப் பாகிஸ்தானில் நல்ல கேள்வி உள்ளது. இலங்கையின் தேயிலையைவிட குறைந்த விலையில் ஆபிரிக்க தேயிலை கொள்வனவு செய்யக்கூடியதாக இருப்பதால் மொத்தத் தேயிலை கேள்வியில் 95 வீதம் ஆபிரிக்க நாடுகளில் இருந்தே கொள்வனவு செய்யப்படுகிறது.இந்த நிலையில் வரி விலக்கையடுத்து விலைகளின் வித்தியாசம் பாரியளவில் குறைவதால் இலங்கையின் தேயிலைக்கு சிறந்த சந்தை வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

## அடையாள அணிவகுப்பு முறைகுறித்து சந்தேகநபர்களின் சட்டத்தரணி ஆட்சேபம்

(மட்டக்களப்பு)

சந்தேகத்தின் பேரில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டவர்களை காயமடைந்தவர் மற்றும் சாட்சிகளுக்கு முன்பாக இராணுவத்தினர் விசாரணை செய்தமையால் அவர்களை இலகுவாக அடையாளம் காட்ட முடியுமெனவும், இதனால் அடையாள அணிவகுப்பை ஆட்சேபிப்பதாகச் சட்டத்தரணி ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு வந்தாறு மூலையில் கடந்தமாதம் 27ஆம் திகதி ஈ.பி.டி.பி அலுவலகம் முன்பாக நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தின் போது ஒருவர் காயமடைந்தார். அதனையடுத்து அவ்வழியால் உந்துருளியில் வந்த இரண்டு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு ஏறாவூர் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் அடையாள அணிவகுப்பிற்காக அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் நேற்று முன்தினம் அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்தப்பட்டபோதே இவர்கள் சார்பாக வாதிட்ட சட்டத்தரணி தனது ஆட்சேபனையைத் தெரிவித்தார்.

ஆனால் இந்த ஆட்சேபனையை நிராகரித்த பதில் நீதவான் இதனை நிரந்தர நீதிபதி முன்னிலையில் வைக்குமாறு பதிலளித்தார். இதனையடுத்து அடையாள அணிவகுப்பு நடைபெற்றது.

இதன்போது ஈ.பி.டி.பி யைச் சேர்ந்தவர்களில் ஒருவர் இரண்டு சந்தேக நபர்களையும் அடையாளம் காட்டியுள்ளார். இதனையடுத்து இரண்டு சந்தேக நபர்களையும் எதிர்வரும் ஒன்பதாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

-மேல் மா.சபை முதல்வருக்கெதிரான குற்றச்சாட்டு குறித்து-

## ஆளுநரால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு சனாதிபதி விசாரணைக் குழுவாக மாற்றம்

மேல்மாகாண சபையின் முதலமைச்சருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக மேல் மாகாண ஆளுநரால் நியமிக்கப்பட்ட விசேட விசாரணைக்குழு சனாதிபதி விசாரணைக்குழுவாக மாற்றப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஆளுநரால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவின் பதவிக்காலம் நேற்றுமுன்தினத்துடன் முடிவடைவதையடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் சனாதிபதி விசாரணைக்குழுவின் அறிக்கை எதிர்வரும் மூன்று மாதங்களுக்குள் சமர்ப்பிக்கவேண்டுமென பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்று முன்தினம் தம்மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பில் முதலமைச்சர் ரெஜினோல்ட் கூரே தமது பதில் அடங்கிய அறிக்கையை சனாதிபதி விசாரணைக் குழுவின் முன்னால் சமர்ப்பித்தார்.

## சிறந்த நடிகருக்கான விருது அத்துரலியேரத்ன தேரருக்கு வழங்கலாம்

### நிதி அமைச்சர் கிண்டல்

ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரருக்கு சிறந்த நடிகருக்கான சரசவிய விருது கிடைக்குமென நிதி அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கடந்த 16 ஆம் 17 ஆம் திகதிகளில் கண்டியில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் அவர் மேற்கொண்ட செயலுக்காகவே இந்தவிருது கிடைக்கலாமென அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். வெள்ளைக்காரர்களுக்கு முன்னால் தேரர் நடந்து கொண்ட விதமானது அவரின் நடிப்பின் திறமையையே வெளிப்படுத்தியது.இந்த நிலையில் பௌத்த தர்மத்தின் அடிப்படையில் வாழ்ந்து நாலு வருடங்களுக்கு முன்னர் மறைந்த வாரியப்பொல சுமங்கல தேரருடன் அத்துரலியே ரத்ன தேரரை எவ்வாறு ஒப்பிடுவது என்றும் அமைச்சர் கேள்வி எழுப்பியுள்ளார்.அத்துரலியே ரத்ன தேரர் கண்டி மாநாட்டின்போது சரசவிய விருது வழங்கப்படத் தகுதியுடையவர் என்ற போதும் இந்த விருதுக்குப் பௌத்தர் என்ற வகையில் அவர் ஏற்புடையவர் அல்ல என்றும் அமைச்சர் சரத் அமுனுகம சுட்டிக்காட்டியுள்ளார்.

## புத்தர் சிலையைச் சுத்தி முட்கம்பி வேலி அமைப்பு

(திருகோணமலை)

திருகோணமலை நகரில் சட்டவிரோதமாக வைக்கப்பட்டுள்ள புத்தர்சிலை உள்ள பகுதி முட்கம்பிகளால் அடைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஏற்கனவே இவ்விடத்தில் இருந்த முச்சக்கரவண்டித் தரிப்பிடம் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளதோடு, இங்கு இராணுவத்தினரின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

# நிவாரணம் புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சு

## யாழ். மாநகரசபைப் பிரதேச நீர்ப்பாதுகாப்பு, சூழல் முகாமைத்துவத்திட்டம்

## (நோர்வே அரசாங்கத்தினால் நிதிப்படுத்தப்பட்டது)

# கேள்வி அறிவித்தல் - இல. 03

## வெள்ள வாய்க்கால்களின் கரைசுவர்களைப் புனரமைத்தல்

01 சிறிலங்கா ஜனநாயக சோசலிச குடியரசின் பொருளாதார சுற்றுப்புற அபிவிருத்தியை முன்னேற்றுவதற்காக நோர்வே அரசாங்கத்துடனான ஒப்பந்தம் ஒன்றின் அடிப்படையில் மேற்படிதிட்டத்திற்கான நிதி இலங்கை அரசாங்கத்திற்குக் கிடைக்கப்பெற்றுள்ளது. இதன் கீழ் தரப்பட்டுள்ளஅட்டவணையில் விபரிக்கப்பட்ட யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட வெள்ள வாய்க்கால்களின் கரைசுவர்களைப் புனரமைக்கும் வேலைகளுக்காக பகிரங்கக் கேள்விகள் இத்தால் கோரப்படுகின்றது.

02 இதன் பின்னகத்துத்தொழில் தருனராக குறிப்பிடப்படும்நிவாரணம் புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சின் செயலாளருக்காக யாழ்ப்பாணம் மாவட்ட செயலாளர்/ அரசாங்க அதிபர் அவர்களால் மூடி பொறி வைக்கப்பட்ட கேள்விகள் 'எம் 8' இக்ராட் ஒப்பந்தக்காரரிடமிருந்து கோரப்படுகின்றன.

03 கேள்விப்பத்திரங்களை மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்விக்கும் ரூபா 500/= படி பணமாகச் செலுத்தி 30-05-2005இல் இருந்து 10.06.2005 பிற்பகல் 3.00 மணி வரை வேலை நேரங்களில் மேற்படி"நீர்ப்பாதுகாப்பு" அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

04 மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தகாரர்கள் கேள்விகோரமுடியும். ஏதாவது ஒரு ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது அவர்களால் மேற்கொள்ளும் "நீர்ப்பாதுகாப்பு" வேலைகள் அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது

05 "இக்ராட்" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையை பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்கவேண்டும். மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளினால் அல்லது திருப்திகரமற்ற வேலை செய்ததனால் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தினை கொண்டிருத்தல் ஆகாது.

06 கடந்த காலங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன், கடந்த ஐந்து வருடங்களின்போது மேற்கொள்ளப்பட்ட வேலைகளை திருப்திகரமாக நிறைவேற்றியிருத்தல்வேண்டும். இது தொழில்தருனர்களிடமிருந்து அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப் பத்திரங்கள் சமர்ப்பித்தல் வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்றும் தரப்படல்வேண்டும்.

07 தகுதிவாய்ந்த கேள்வி கோருவோர் கேள்விப் பத்திரங்களை இலவசமாகப் பார்வையிட்டு மேலதிக விபரங்களை "நீர்ப்பாதுகாப்பு" அலுவலகம், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல. 021-222 6752.

08 சமர்ப்பிக்கப்படும் கேள்விகள்யாவும் அவை திறக்கப்படும் தினத்தில் இருந்து 90 நாட்களுக்குச் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன் யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரின் பெயரில் எடுக்கப்பட்ட எதிரே குறிக்கப்பட்ட தொகைக்கான கேள்விப்பிணைப்பத்திரமும் இணைக்கப்பட்டு, "மாவட்ட செயலாளர்/ அரச அதிபர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு தனித்தனி உறைகளில் இடப்பட்டு 13.06.2005 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாக இரு பிரதிகளாக அனுப்புதல் வேண்டும். இதற்கென அலுவலகத்தில் புனர்வாழ்வுப் பகுதிக் கணக்காளரின் அறையில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியிலும் இடப்படலாம். கேள்விப்பத்திரத்தை கொண்டுள்ள கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிடுதல் வேண்டும்.

09 அதேதினம் 15.00 மணிக்கு கேள்விகள் யாவும் அரசாங்க அதிபர் முன்னிலையில் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

10 கேள்வி கோருவோருக்கு இதன்போது ஏற்படும் செலவுகளுக்கு தொழில்தருநர் பொறுப்புடையவர் ஆகார்.

### விபர அட்டவணை

| இல. | யாழ்.மாநகர சபை எல்லையுள் வெள்ள வாய்க்காலின் பெயர் | இக்ராட் நிறுவனத்தில் கொண்டுள்ள ஆகக் குறைந்த பதிவு | மீளளிக்கக் கூடிய கேள்விப்பத்திரப் பிணை வைப்புப் பணம் (ரூபா) |
|---|---|---|---|
| 01. | கச்சேரி- நல்லூர் வீதியிலிருந்து நாயன்மார்கட்டு குளம்வரை (JPO/WC/CH/2G) | 08 | 12,700.00 |
| 02. | நாயன்மார்கட்டு குளத்திலிருந்து வண்ணான்குளம் வரை.(JPO/WC/CH/3G) | 08 | 5,700.00 |
| 03. | வண்ணான்குளத்திலிருந்து செம்மணி வீதிவரை(JPO/WC/CH/4G) | 08 | 14,500.00 |
| 04. | கனகரத்தினம் வீதியிலிருந்து பிரப்பங்குளம் வரை(JPO/WC/CH/1H) | 08 | 12,400.00 |
| 05. | நெடுங்குளத்திலிருந்து வண்ணான்குளம்வரை (JPO/WC/CH/1AH) | 08 | 12,800.00 |
| 06. | கண்டிவீதியிலிருந்து பிரப்பங்குளம் வரை (JPO/WC/CH/2H) | 08 | 9,600.00 |
| 07. | வண்ணான்குளத்திலிருந்து கடல் வரை (JPO/WC/CH/2AH) | 08 | 21,400.00 |
| 08. | பிரப்பங்குளத்திலிருந்து இலந்தக்குளம் வரை (JPO/WC/CH/3H) | 08 | 16,400.00 |
| 09. | இலந்தைக்குளத்திலிருந்து கால்வாய்வரை. (JPO/WC/CH/4H) | 08 | 17,200.00 |

27.05.2005
மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.

தலைவர்,க.கணேஷ், மாவட்டக் கேள்விச்சபை,
மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

(சி-11989)

## முன்னாள் பிரதமர் கொழும்பு விஜயம்

மலேசிய நாட்டின் முன்னாள் பிரதமர் மஹ்திர் மொகமத் நேற்று முன்தினம் முற்பகல் பத்துமணிக்கு இலங்கையை வந்தடைந்தார் மலேசிய நாட்டின் விசேட வானூர்தியின் மூலம் அவர் கட்டுநாயக்கவை வந்த டைந்தார். பட்டயக்கணக்காளர் முகாமை நிறுவன உலக மாநாட்டில் பங்கேற்பதற்காகவே மஹ்திர் இலங்கை வந்துள்ளார். இந்த விஜயத்தின்போது அவர் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும் சந்திக்கவுள்ளார்.

இலங்கை வந்துள்ள மலேசிய முன்னாள் பிரதமர் மஹ்திர் மொகமத்தை தகவல்துறை அமைச்சர் சேகு இஸ்ஸதீன் சந்திக்கவுள்ளார். இதன்போது நடைமுறையில் உத்தேசிக்கப்பட்டுள்ள ஆழிப்பேரலையின் பின்னரான பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் முஸ்லிம் சமாதானச் செயலகம் அமைப்பது குறித்து பேசப்படுமென பிரதி அமைச்சரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

## யுவதி கொலை ஐவர் கைது

குவைத்தில் இலங்கை யுவதி ஒருவரைக் கொலை செய்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள ஐந்து இலங்கையர்களை அந்த நாட்டுப் பொலிசார் கடந்த வாரம் கைது செய்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் தொழிலுக்காக இலங்கையில் இருந்து சென்றவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இவர்கள் தொடர்பிலும் கொல்லப்பட்ட யுவதி தொடர்பிலும் வெளிநாட்டு அமைச்சு தகவல்களைக் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொள்ளையிட முயன்ற மாணவர்கள் கைது

போலித் துப்பாக்கியைக் காட்டி வங்கியொன்றில் கொள்ளையிட முயன்ற இரண்டு பாடசாலை மாண வர்கள் சிறிலங்கா பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வெலிகமவிலுள்ள வங்கியொன்றிற்குள் சென்ற இரண்டு பாடசாலை மாணவ்கள் போலித் துப்பாக்கியைக் காட்டி வங்கித் தொழிலாளர்களை மிரட்டியதுடன் பணத்தை தருமாறு வற்புறுத்தியுள்ளனர்.

வங்கியின் முகாமையாளர் வெலிகம சிறிலங்கா பொலிசாரிடம் மேற்கொண்ட முறைப்பாட்டையடுத்து அந்த இரு சிறுவர்களையும் சிறிலங்காப் பொலிசார் கைது செய்திருந்தனர்.

கைதுசெய்யப்பட்ட அந்தச் சிறுவர்களின் பெற்றோரின் வேண்டுகோளுக்கமைய அவர்களை பிணையில் விடுதலை செய்ததாக வெலிகம சிறிலங்காப் பொலிசா தகவல் வெளியிட்டுள்ளனர்.

## பொலிஸ் அதிகாரியை கைது செய்யப் பணிப்பு

மாத்தளை, சிறிலங்கா பொலிசாரின் சிரேஷ்ட பொறுப்பதிகாரியை கைது செய்யுமாறு ஊவா மாகாண உயர் நீதிமன்ற நீதிபதி சுனில் பெரேரா உத்தர விட்டுள்ளார்.

சட்டவிரோதமாக நான்குபேரை தடுத்துவைத்திருந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள மாத்தளை சிறிலங்கா பொலிஸ் சிரேஷ்ட பொறுப்பதிகாரி ஜயசேகர முதலிகே சிசிர குமார ஜெயசேகரவையே கைது செய்யுமாறு ஊவாமாகாண உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதற்கான பிடிவிறாந்தினை ஊவா மாகாண உயர்நீதிமன்றம் பதுளை சிறிலங்காப் பொலிசாருக்கு அனுப்பி வைத்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# அரசாங்க அறிவித்தல்

## வாக்காளர் இடாப்புத் திருத்தம் –2005

### (விடுவிக்கப்படாத பிரதேசங்களுக்கு மட்டும்)

(1) 1980ஆம் ஆண்டின் 44ஆம் வாக்காளர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 12(1) ஆம் பிரிவின்படி 2005ஆம் ஆண்டுக்குரியவாக்காளர் பதிவேடுகளின் திருத்தம் ஆரம்பமாகி விட்டதென்று இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

(2) தற்சமயம் நடைமுறையிலிருக்கும் வாக்காளர் பதிவேடுகளின் பிரதிகள் அல்லது அவற்றின் பாகங்கள் பதியும் அலுவலர்களால் கீழ்க்கானும் அலுவலகங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

| பதிவேடுகள் அல்லது அவற்றின் பாகங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள அலுவலகங்கள். | பார்வைக்கு வைக்கப்படும் பதிவேடுகள் அல்லது அவற்றின் பாகங்கள். |
|---|---|
| 2.1 மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம் | அரசாங்க அதிபர் அம் மாவட்டத்திற்குப் பதியும்அலுவலராயிருக்கும் அந்தந்தத் தேர்தல் மாவட்டங்களுக்கான பூரணமான வாக்காளர் பதிவேட்டுப் பிரதி |
| 2.2 பிரதேச செயலகம்/உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் | பிரதேச செயலகப்பிரிவு அடங்கிய பகுதியிலுள்ள வாக்காளர் பெயர்களடங்கிய பதிவேட்டின் பாகங்கள் |
| 2.3 நகர/ பிரதேச சபை அலுவலகங்கள். | பிரதேச சபைகள்/நகர சபைகளினுள் வதியும் சகல வாக்காளர்களினதும் பெயர்கள் அடங்கிய இடாப்பின் பாகங்கள் |
| 2.4 கிராம அலுவலர்களின் அலுவலகங்கள். | கிராமஅலுவலர் பிரிவிற்குள்ளிருக்கும் எல்லா வாக்காளர்களினதும் பெயர்கள் அடங்கிய இடாப்பின் பாகங்கள். |

(3) ஏதாவதொரு தேர்தல் மாவட்டத்தில் ஒரு வாக்காளராகத் தகுதியுள்ள ஒவ்வொருவரும்,தமது பெயர்வாக்காளர் இடாப்பில் பதியப்பட்டிருக்கிறதா என்று மேலே குறிப்பிட்ட அலுவலகங்களில் பொது மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள வாக்காளர் இடாப்புக்களைப் பார்வையிடுவதன்மூலம் நிச்சயப்படுத்திக்கொள்ளலாம்.

(4) 2005ஆம் ஆண்டு யூன் மாதம் 01ஆம் திகதி 18 வயதை பூர்த்தியடைந்த வாக்காளர்ஒருவராக பதிவு பெறுவதற்கு விண்ணப்பித்த ஒவ்வொருவரும் தத்தமது பகுதி கிராமஅலுவலரிடம் 01. 06. 2005 தொடக்கம் 30. 06. 2005ஆம் திகதிவரை இவற்றுக்கான விண்ணப்பங்களைப் பெற்று பூரணப்படுத்தி அவற்றினை மீள கிராம அலுவலரிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள் குறிப்பிட்ட விண்ணப்பபத்திரத்தில் கேட்கப்பட்டுள்ள சகல தகவல்களும் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப் பத்திரம் நிராகரிக்கப்படும்.

A.S.கருணாநிதி
உதவி பதியும் அலுவலர்,
தேர்தல் மாவட்ட இல 11,
வன்னி.

தேர்தல்கள் அலுவலகம்,
வவுனியா.

(சி-12019)

## சுவிஸில் கலாமுக்கு கௌரவம்

இந்திய சனாதிபதி அப்துல்கலாமை கௌரவித்து மே 26ஆம்திகதி விஞ்ஞான தினத்தைக் கொண்டாடியதாக சுவிற்சர்லாந்து அரசு அறிவித்துள்ளது.

ரஷ்யா சென்ற சனாதிபதி அப்துல் கலாம்அங்கு இருந்து கடந்த புதன் கிழமை இரவு சுவிற்சர்லாந்து சென்றார். தலைநகர் ஜெனீவாவில் அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அந்த நாட்டில் அப்துல்கலாம் நான்கு நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கிறார்.

## தே.ஜ.கூட்டணி வென்றால் நிதிஷ்குமார்தான் முதல்வர்

### வெங்கையா நாயுடு

பீகாரில் நடக்கவிருக்கும் சட்ட சபைத் தேர்தலில் தே.ஜ. கூட்டணி வெற்றி பெற்றால் நிதிஷ்குமார்தான் முதல்வர் என்று வெங்கையாநாயுடு அறிவித்தார்.பீகார்சட்டசபை கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு ஆறு மாதத்துக்குள் மீண்டும் சட்ட சபைத் தேர்தல் நடக்க இருக்கிறது. தேர் தலைச் சந்திக்க அரசியல் கட்சிகள் தயாராகி வருகின்றன.

இந்த நிலையில் அகில இந்திய பா.ஜ. துணைத்தலைவர் வெங்கையா நாயுடு தெரிவிக்கையில்;பீகாரில் மீண்டும் நடக்கவிருக்கும் சட்டசபைத்தேர்தலில் தே.ஜ.கூட்டணிதான் வெற்றி பெறும் தே.ஜ.கூட்டணி வெற்றி பெற்றால் ஐக்கிய ஜனதாத்தளத் தலைவா நிதிஷ்குமார் தலைமையில் ஆட்சி அமைக்கப்படும்.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் இடையே கருத்து வேறுபாடு இருக்கிறது. ஆனால் தே.ஜ.கூட்டணியில் நாங்கள் ஒற்றுமையாக இருக்கிறோம். தமிழகம், புதுவை, கேரளா அசாம்,மேற்கு வங்காளம் ஆகிய மாநில சட்டசபைத்தேர்தல்கள் நடக்கவிருக்கின்றன அதோடு பீகார் சட்ட சபைத் தேர்தலும் நடக்கவிருக்கிறது. இந்தத் தேர்தலுக்கான வியூகத்தை நாங்கள் வகுப்போமென்றார்.

# மீள் கேள்வி அறிவித்தல்

## வலயக் கல்வி அலுவலகம், தென்மராட்சி

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளரினால் 2005ஆம் ஆண்டு யூன் மாதம் 09ஆம் திகதி ஏற்றுக் கொள்ளப்பட்டு அன்றைய தினமே முற்பகல் 11. 30 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| பாடசாலையின் பெயரும் வேலை விபரமும் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் | இக்ராட் இலக்கம் |
|---|---|---|---|
| 1. யா/மீசாலை வீரசிங்கம் ம.வி. (20,30,) கணினி பயிற்சி அறை கீழ்மாடி அமைத்தல்) | 500/- | 15000/- | எம்.8 |

01. அ) மேற்படி வேலைக்கு இக்ராட் (ICTAD) நிறுவனத்தின் 08ஆம் அதற்கு மேற்பட்ட தரத்திற்கும் பதிவு செய்து கொண்டவர்கள் விண்ணப்பிக்கத் தகுதிபெற்றவர்களாவர்.

ஆ) பாடசாலை அபிவிருத்திச்சங்கம் தங்களால் இவ்வேலையைச் செய்து முடிக்க முடியுமானால் தங்கள் பாடசாலைக்குரிய கேள்விப்பத்திரங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம். பாடசாலை அபிவிருத்திச்சங்கத்திற்கு முதலாம் பந்தி 'அ' இல் குறிப்பிட்ட சட்ட திட்டமும் மீளளிக்கக்கூடிய, மீளளிக்க முடியாத வைப்புப்பணமும் விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது.

02. கேள்விப் பத்திரங்களில் பெறுமதி சேர்வரி (VAT) 15 % சேர்க்கப்பட்ட கேள்வித்தொகை, பெறுமதி சேர்வரி (VAT) 15 % சேர்க்கப்படாத கேள்வித்தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

03. மேற்படி வேலைக்கான கேள்விப்பணத்தை தென்மராட்சிக் கல்வி வலயத்தின் வலயக்கல்விப்பணிப்பாளரின் வங்கிக் கணக்கில் வைப்புச்செய்து அல்லது இக்காரியாலயத்தில் நேரடியாகச் செலுத்தி 27. 05. 2005 ஆம் திகதியிலிருந்து 07. 06. 2005ஆம் திகதி நண்பகல் 12. 00 மணிவரை தென்மராட்சிக்கல்வி அலுவலகப் பாடசாலை வேலைகள் கிளையில் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்திசெய்து மூலப்பிரதியும் எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப் படிவமும், கையொப்பம், இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினையும் கேள்விப்பத்திர இணைப்பிரதியினையும் தனித்தனி இரு கடிதஉறைகளில் இட்டு கடித உறையில் இடப்புற மேல்ப் பக்கத்தில் வேலையின் விபரம் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையில் இட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தக்காரர்களின் முத்திரையிடப்பட்டு தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் 2005ஆம் ஆண்டு யூன் மாதம் ஒன்பதாம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11. 00 மணிக்கு முன்னர் இடப்படவேண்டும். மேற்குறிப்பிட்ட காலநேரத்திற்குப் பிந்திய கேள்விப்பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

05. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் தெரிவுசெய்யப்படும் திகதியிலிருந்து ஆறு மாத காலத்திற்குள் அனைத்து வேலைகளையும் பூர்த்தி செய்து கையளிக்கவேண்டும். எதுவித காலதாமதங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. சரியாக நிரப்பப்படாத பிழைகள் கூடிய தெளிவற்ற கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

06. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விபரங்களைப் பாடசாலை வேலைகள் கிளையிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பாடசாலை வேலைகள் கிளை,
வலயக்கல்வி அலுவலகம்,
தென்மராட்சி.

திருமதி.றெ.இருதயநாதன்
வலயக் கல்விப் பணிப்பாளர்,
தென்மராட்சி.

(சி-12020)

## பிரையன் லாறா 29 ஆவது டெஸ்ட் சதம்
## மே.தீவு முதல் இன்னிங்சில் 345 ஓட்டம்



பிரையன் லாறாவின் அபார சதத்தின் மூலம் பாகிஸ்தானுடனான முதலாவது கிரிக்கெட் டெஸ்ட்டின் முதல் நாள் மேற்கிந்தியத் தீவுகள் அணி தனது முதல் இன்னிங்சில் 345 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. லாறா நான்கு ஆறு ஓட்டங்கள் 16 நான்கு ஓட்டங்கள் உட்பட 130 ஓட்டங்களைப்பெற்றார். இது அவர் பெறும் 29 ஆவது டெஸ்ட் சதமாகும். ஆரம்பத்தில் 45 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களை இழந்திருந்த மேற்கிந்தியத்தீவுகள் அணி நான்காவது விக்கெட் இணையாகக் களமிறங்கிய பிரையன் லாறா, சந்தர்போல் இருவரும் 169 ஓட்டங்களைப் பெற்றனர். எனினும் சந்தர் போல் மேலும் ஒரு டெஸ்ட் சதம் பெறும் வாய்ப்பை எட்டு ஓட்டங்களால் இழந்துவிட்டார். அவர் 92 ஓட்டங்களைப் பெற்றார். கெய்ல்ஸ் நான்கு ஓட்டங்களையும், சர்வான் ஆறு ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர்.

லாறா, பிரெட்மனின் 29 டெஸ்ட் சதம் என்ற சாதனையை சமன் செய்ததுடன், டெஸ்ட் அந்தஸ்துப் பெற்ற அனைத்து அணிகளுக்கு எதிராக சதம் அடித்த வீரர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார்.

பாகிஸ்தான் சார்பில் டேனிஷ் கனேரியா, அப்துல் ரசாக், சபீர் அகமது ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு ஆடிய பாகிஸ்தான் ஆட்ட நேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 22 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. சல்மான்பட், சயிட் அப்ரிடி இருவரும் முறையே ஐந்து, 12 என்ற ஓட்டங்களுடன் களத்திலுள்ளனர்.



## இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட்
## பங்களாதேஷ் 108 ஓட்டங்களில் சுருண்டது

இங்கிலாந்து அணியுடன் முதன் முதலாக டெஸ்ட் போட்டியில் விளையாட ஆவலுடன் சென்ற பங்களாதேஷ் கிரிக்கெட் அணியை இங்கிலாந்து பிழிந்தெடுத்துவிட்டது.

லோட்ஸ் மைதானத்தில் நேற்று முன்தினம் ஆரம்பான முதலாவது டெஸ்ட் போட்டியின் முதல் நாள் பங்களாதேஷ் அணி 108 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. அவ்வணியின் ஜாவிட் ஓமர், ஹபிபுல் பஷார் இருவர் மட்டுமே அதிகபட்சமாக முறையே 20, 22 என்ற ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றனர்.



இங்கிலாந்து அணி சார்பில் மத்தியு ஹோகாட் நான்கு விக்கெட்டுக்களையும், ஹார்மிசன், பிளின்டொப் தலா இரண்டு விக்கெட்டுக்களையும், ஜோன்ஸ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.



பதிலுக்கு ஆடும் இங்கிலாந்து தனது முதலாவது இன்னிங்சில் முதல் ஆட்ட நேர முடிவில் ஒரு விக்கெட்டை இழந்து 188 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. தொடர்ந்து இராண்டாம் நாளில் தேனீர் இடைவேளையின்போது மூன்று விக்கெட்டுக்களை இழந்து 491 ஓட்டங்களைப் பெறறு வலுவான நிலையை அடைந்துள்ளது.

துடுப்பாட்டத்தில் ரெஸ் கொதிக் 194 ஓட்டங்களையும், மைக்கல் வோன் 120 ஓட்டங்களையும் பெற்றனர். ஆரம்ப வீரராகக் களமிறங்கிய அன்ரு ஸ்ரோஸ் 69 ஓட்டங்கள் பெற்று ஆட்டமிழந்தார்.

## வலுமிக்க துடுப்பாட்டவீரராக கங்குலி மீளிருவார்-சேவாக்




அணித்தலைவர் கங்குலி இங்கிலாந்து சென்று கவுண்றி போட்டிகளில் விளையாடுவது அவருக்கு நல்ல பயிற்சியாக அமையும் அவர் மீண்டும் நல்ல திறமையோடு வலுமிக்க துடுப்பாட்ட வீரராக திரும்பி வருவார் என்பதில் எனக்கு நம்பிக்கையுள்ளது என சேவாக் தெரிவித்துள்ளார். ஒவ்வொரு துடுப்பாட்ட வீரருக்கும் இது போல ஒரு கட்டத்தில் பின்னடைவு ஏற்படுவது சகஜமே. இதற்கு பல வரலாற்று உதாரணங்கள் உண்டு.

கவுண்றி கிரிக்கெட் போட்டிகளில் ஒவ்வொரு வீரரும் விளையாடுவது நல்லதே. திறமையை வளர்த்துக் கொள்ள அது நல்ல வாய்ப்பை ஏற்படுத்தி கொடுக்கும்.

பழைய பயிற்சியாளர் ஜோன்ரைட் மீது எனக்கு பெரிய வருத்தம் எதுவும் கிடையாது ஆனால் நான் சில நேரங்களில் மடத்தனமான அடிகளை அடிப்பதாக அவர் வெறுப்புற்றது உண்மையே ஆனால் அவருடைய கோபம் என் நல்லதுக்காகத்தான். அது ஒரு சகோதரரின் உணர்வையே வெளிப்படுத்தியது எனக் கூறினார்.

## 2007 உலகக்கிண்ணத்தை சிறிலங்கா அணி கைப்பற்றும்

### புதிய பயிற்சியாளர்நம்பிக்கை



'2007 இல் நடக்கவிருக்கும் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் சம்பியன் பட்டம் வெல்வதே குறிக்கோள்' என்று இலங்கையின் புதிய பயிற்சியாளர் டொம் மோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

2007 ஆம்ஆண்டு நடக்கவிருக்கும் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணியை சம்பியன் பட்டம் பெறச் செய்வதே குறிக்கோளகும்.

முன்னாள் முன்னணி வீரர்களுடன் இது குறித்து ஆலோசித்து புதிய யுக்திகளை கையாள முயற்சிப்போம். தற்போது இலங்கை அணி ஒரு நாள் கிரிக்கெட் போட்டி வரிசையில் இரண்டாவது இடத்திலும், டெஸ்ட் போட்டியில் ஐந்தாவது இடத்திலுமுள்ளது. டெஸ்ட் போட்டியில் விரைவில் முதல் மூன்று இடத்துக்குள் வர முயற்சிகளை மேற்கொள்வோம் என்றார் மோடி.




## சம்பியன் கோப்பை கிரிக்கெட் வரிவிலக்களிக்க அரசு ஒப்புதல்

இந்தியாவில் 2006 இல் நடைபெறவுள்ள சம்பியன் கோப்பை கிரிக்கெட் போட்டிக்கு வரிவிலக்கு அளிக்க மத்திய அரசு முன்வந்துள்ளது.

டில்லியில் வியாழக்கிழமை நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் இம்முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இது தொடர்பாக நிருபர்களிடம் மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் கூறியதாவது:

இந்தியாவில் வசிப்பவர்களுக்கும், வெளிநாடுகளில் வசிப்பவர்களுக்கும் இந்தியாவில் நடைபெறும் சர்வதேசப் போட்டிகளின் மூலம் கிடைக்கும் வருமானத்திற்கு வரிவிலக்கு அளிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. சர்வதேச கிரிக்கெட் சபை மற்றும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை ஆகியவை பிரதமரிடம் விடுத்த கோரிக்கையை அடுத்து மத்திய அரசு இம்முடிவை மேற்கொண்டுள்ளது.



துருக்கியின் இஸ்தான்புல் நகரில் சம்பியன்ஸ் லீக் கால்பந்து இறுதிப்போட்டி நடந்தது. இதில் லிவர்பூல் கழக அணி 3-2 என்ற கோல் கணக்கில் எப்.சி. மிலனை வீழ்த்தியது. சம்பியன் கோப்பையுடன் மகிழ்ச்சி பொங்க லிவர்பூல் வீரர்கள்.

## மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு மாபெரும் மரதன் ஓட்டப்போட்டி

மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறையினர் நடாத்தும் பாடசாலை மாணவர்களுக்கான மாபெரும் மரதன், சைக்கிள் ஓட்டப் போட்டிகள் எதிர்வரும் 31ஆம், 01ஆம் திகதிகளில்ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும், இதில் பங்குகொள்ள விரும்பும் பாடசாலை மாணவர்கள் பாடசாலை ஊடாக வலயக் கல்விப் பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

31.05.2005 காலை 6.00 மணிக்கு ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி உடையார்கட்டுப் பாடசாலையில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு கிளிநொச்சி மையப் பகுதியை வந்தடையும் எனவும், 31.05.2005 காலை 6.30 மணிக்கு பெண்களுக்கான மரதன் ஓட்டப்போட்டி விசுவமடு மையப் பகுதியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு கிளிநொச்சி மையப் பகுதியை வந்தடையும் எனவும், 01.06.2005 ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டம் காலை 6.00 மணிக்கு புதுக்குடியிருப்பு சந்தியில் இருந்து ஆரம்பித்து கிளிநொச்சி மையப் பகுதியை வந்தடையும் எனவும், 01.06.2005 பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டி காலை 6.30 மணிக்கு தேவிபுரம் சந்தியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு கிளிநொச்சி மையப் பகுதியை வந்தடையும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் போட்டி யாளர்கள் உரிய நேரத்திற்கு குறிப்பிட்ட இடங்களுக்கு வருகைதர வேண்டும் எனவும் கிளிநொச்சி விளையாட்டுத் துறை யினர் அறிவித்துள்ளனர்.

## தாச்சி இறுதிப் போட்டி நாளை

தமிழீழ விளையாட்டுத்துறையின் அனுசரணையுடனும், இலங்கை வங்கி, வர்த்தக வங்கி ஆகியவற்றின் ஆதரவுடன் யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் நடத்திய தாச்சிப் போட்டியின் இறுதிப் போட்டிகள் நாளை பிற்பகல் 4.00 மணிக்கு கைதடி வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் தலைவர் வை. ஆனந்த் ஜெயஸ்கரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் கி. பாப்பா, பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, இலங்கை வங்கி யாழ். மேற்தரக் கிளை முகாமையாளர் எஸ். விக்கினராசா, வர்த்தக வங்கி யாழ். கிளை முகாமையாளர் க. ரவீந்திரா, யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி றொகான் இராஜசிங்கம், யாழ். மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ரி.மாதுளன், தென்மராட்சிக் கோட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ப. கெங்காதரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இறுதிப் போட்டியில் பெண்கள் பிரிவில் அரியாலை காந்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாவற்குழி அருள் விளையாட்டுக் கழகமும், ஆண்கள் பிரிவில் இணுவில் கலாஜோதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து தாவடி காளி அம்பாள் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (41)

## வவுனியா மாவட்ட விளையாட்டு விழா

வவுனியா மாவட்ட விளையாட்டு விழா நாளை பிற்பகல்2.30 மணிக்கு வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வவுனியா அரச அதிபர் சி. சண்முகம் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விளையாட்டு விழாவில் பிரதமவிருந்தினர்களாக வன்னி புனர்வாழ்வு அபிவிருத்தி அமைச்சர் ரிஷாத்பதியுதீன், பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சதாசிவம் கனகரட்ணம், சிவசத்தி ஆனந்தன், வினோ நோகராதலிங்கம், சிவநாதன் கிஷோர் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக வன்னி புனர்வாழ்வு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ராசிக், முன்னாள் மேலதிக அரச அதிபர் இரகுநாதபிள்ளை, வவுனியா மேலதிக அரச அதிபர் திருமதி சாள்ஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (10)

## கிளிநொச்சி மாவட்ட பெருவிளையாட்டு-2005 இறுதி நாள் நிகழ்வுகள் இன்று

கிளிநொச்சி மாவட்ட பிரதேச சபைகளுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான பெரு விளையாட்டு போட்டியின் இறுதி நாள் நிகழ்வுகள் இன்று கிளி. மத்திய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். இதேவேளை, கடந்த 25, 26ஆம் திகதிகளில் நடைபெற்ற கால்பந்து போட்டியில் பூநகரி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த தெரிவு அணியும், மென்பந்து கிரிக்கெட் போட்டியில் கரைச்சி பிரதேசத்தைச் சேர்ந்த தெரிவு அணியும் சம்பியனானது. மேற்படி போட்டிகளுக்கு மத்தியஸ்தர்களாக சாண்டஸ், சிவநேசன், புவனேந்திரராஜா, கலாதரன், [illegible]ராஜா, [illegible], சுபானந்த், தனபாலன், சாரங்கன் ஆகியோர் கடமையாற்றினர். போட்டிகள் அனைத்தையும் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அலுவலர் கனகராசா நெறிப்படுத்தினார்.



**சிந்தனைக்கு**

சிங்களப் பயங்கரவாதமானது எமது தேசிய ஆன்மாவில் விழுத்திய வடுக்கள் என்றுமே மாறப்போதில்லை.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 28-05-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## எவ்வளவு முடியுமோ அவ்வளவு விரைவில்

திருமலை நகரில் முன்அனுமதி எதுவுமின்றி வைக்கப்பட்ட புத்தர்சிலையை அகற்றுவதற்கு இரண்டாம் திகதி வரையில் தமிழர் தரப்பால் காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக மாவட்ட ரீதியில் நடைபெறவிருந்த மக்கள் எதிர்ப்புப் போராட்டங்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

அரசாங்கத் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்கவே இக்காலஅவகாசம் வழங்கப்பட்டது.சிறிய விவகாரங்களில் இருந்து அரசியல் முக்கியத்துவம் மிக்க விவகாரங்கள்வரை தமிழ் மக்கள் பிரச்சினைகள் தொடர்பான தீர்விற்கு சிறிலங்கா ஆட்சியாளர்களுக்குக் காலஅவகாசம் வழங்குவது ஒன்றும் புதிதல்ல. கடந்த 50 வருடங்களுக்கு மேற்பட்ட வரலாறே கால அவகாசம் வழங்குவதாகவே இருந்து வந்துள்ளது. அத்தோடு தமிழ் மக்கள் ஏமாற்றப்படுவது,அன்றி அரசாங்கம் தனது வாக்குறுதிகளை நிறைவேற்றாததும் வரலாறாகவே இருந்து வந்துள்ளது.

சிறிலங்கா அரசாங்கம் தொடர்ச்சியாக தமிழ் மக்களை ஏமாற்றுகின்ற போதும், தமிழ் மக்கள் அனைத்து விடயங்களிலும் பெருந்தன்மையுடனேயே நடந்துகொண்டுள்ளனர். அதாவது சிங்கள ஆட்சியாளர்கள்ஏமாற்றுபவர்கள் என்பது தெரிந்துகொண்ட நிலையிலும் பல விடயங்களில் விட்டுக்கொடுப்புடனேயே செயற்பட்டு வருகின்றார்கள்.

யுத்தநிறுத்த உடன்பாடு,இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை, சுனாமி மீள்கட்டமைப்பிற்கான பொதுக்கட்டமைப்பு என்பவற்றில் இருந்து திருமலை புத்தர்சிலை விவகாரம் வரையில் இதனைத் தெளிவாகவே அவதானிக்க முடியும். அவ்வாறு இல்லாது விடில் இதுவரையில் மீண்டும் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டிருக்கும்.

யுத்தம் ஆரம்பிக்கப்படாமைக்குச் சில வேளைகளில் புலிகள் பலவீனமடைந்துவிட்டார்கள் என அரசாங்கம் தப்பாகக் கணிப்பீடு செய்திருக்கக் கூடும். ஏனெனில் சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் போன்றோர் இத்தகைய கருத்துக்களை பிரதிபலிப்பவர்களாகவே உள்ளனர். ஆனால் இது உண்மையும் இல்லை. யதார்த்தத்திற்குப் பொருத்தமானதும் அல்ல.

விடுதலைப்புலிகள் யுத்தத்தை ஆரம்பிக்காமை என்பது, பிரச்சினைகளைச் சமாதான வழிமுறை மூலம் தீர்த்துக் கொள்வதற்கு வழங்கும் சந்தர்ப்பமே ஆகும். ஆனால், இவ்விடயத்தில் இதுவரை எத்தகைய முன்னேற்றமும் ஏற்படவில்லை. இந்நிலையிலும், திருமலை புத்தர்சிலை விவகாரத்தில், அகற்றுவதற்குத் தமிழர் தரப்பில் இருந்துகால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அன்றி தொடர்ச்சியான போராட்டங்கள் நடத்தப்படும் என எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

சிங்கள ஆட்சியாளர்கள் மனம் வைத்திருப்பின் புத்தர்சிலை விவகாரத்தை ஆரம்பத்திலேயே இலகுவாகத் தீர்த்துவைத்திருக்க முடியும். அதாவது நீதிமன்ற உத்தரவை பொலிசார் அமுல்படுத்தியிருந்தால் அது சாத்தியமானதாகியிருத்தல் முடியும். ஆனால் பொலிசார் -அரசாங்கம் அதற்கு மாறாக செயற்பட்டமையினால் அது இன்று அரசியல் விவகாரமாகும் அளவிற்கு வளர்ச்சிகண்டுள்ளது. ஆயினும், அரசாங்கம் தற்பொழுது கூட உறுதியான தீர்மானம் எடுத்தால் இவ்விவகாரத்தை உடன் முடிவுக்குக்கொண்டு வந்தவிட முடியும்.

இதேவேளை தமிழர் தரப்பிலும் இவ்விவகாரம் குறித்து தீவிரமான முடிவிற்கு வரவேண்டியது அவசியமானதாகும். ஏனெனில் சிலை அகற்றப்பட காலதாமதமாகும் நிலையில் இருவாரங்களே ஆகிய சிலைக்கு அவ்விடத்தில் நீண்ட வரலாறே உள்ளது எனக்காட்டத் தொடங்கிவிடுவார்கள். இதனைத்தவிர இப்பௌத்தசிலை விவகாரமானது கா.பொ.த உயர்தரப்பரீட்சையை எதிர்கொண்டுள்ள தமிழ் மாணவர்கள் மத்தியில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தக் கூடியதாகும்.

அதாவது க.பொ.த.உயர்தரப்பரீட்சையில் புத்தர் சிலை விவகாரத்தினால் பாதிப்புக்கள் ஏற்படுமா? என்ற ஐயப்பாடு பெருமளவில் மாணவர்கள் மத்தியில் எழுந்துள்ளது. இதன்காரணமாக மாணவர்கள் பரீட்சைக்குத் தம்மைத் தயார்ப்படுத்துவதில் பெரும் மனக்குழப்பத்திற்குள்ளாக்கியுள்ளனர்.

ஆகையினால், மாணவர்கள் குழப்பமின்றி பரீட்சையை எதிர்கொள்ளவேண்டிய சூழ்நிலை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என மாணவர்கள் தரப்பில் எதிர்பார்க்கப்படுகின்றது. ஏற்கனவே சுனாமியினால் பாதிக்கப்பட்டு பெரும் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ள வடக்கு-கிழக்கு மாணவர்களை இப்புத்தர் சிலை விவகாரமும் குழப்பத்திற்கு உள்ளாக்கியுள்ளது என்பதே இன்றைய நிலையாகும்.

சிலவேளை அரசாங்கம் கூட இதனைக் கருத்திற்கொண்டுதான் இரண்டாம்திகதி வரை காலஅவகாசம் கோரியதோ எனச் சந்தேகம் கொள்ள வைக்கின்றது. அதாவது, பரீட்சை ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் அதனைக் கருத்திற்கொண்டு தமிழர் போராட்டம் பிந்திப் போய்விடலாம் என அது எண்ணுவதாக இருத்தல் கூடும். இவ்வாறு சந்தேகிப்பதற்குக் கடந்தகால வரலாறுகளே அடிப்படையாகி யுள்ளன.

ஆகையினால் புத்தர் சிலை விவகாரம் எவ்வளவு விரைவில் முடிவிற்கு வருதல் முடியுமோ அத்தகைய விரைவில் முடிவிற்கு வருதல் வேண்டும். நீதிமன்றத் தீர்ப்பை அரசாங்கம் உடனடியாக அமுல் படுத்தி மாணவர்கள் நல்லதொரு மனநிலையில் பரீட்சையை எதிர்கொள்வதற்கான சூழ்நிலையை உருவாக்குதல் வேண்டும். அது தவறும் பட்சத்தில் கடந்தகாலத்தைப் போன்றே தமிழ் மாணவர்களின் விடயத்தில் அரசாங்கம் மீண்டும் மீண்டும் தவறிழைப்பதாகவே இருக்கும்

# சிறிலங்காவின் பிரதான அரசியல் கட்சிகளால் பெருமளவு சட்டவிரோத ஆயுதங்கள் விநியோகம்!

(கொழும்பு)

சிறிலங்காவில் பல்வேறு ஆட்சியாளர்களினாலும், பெருமளவு சட்ட விரோத ஆயுதங்கள் வழங்கப்பட்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உட்பட ஏனைய கட்சிகளின் ஆட்சிக் காலத்தில் நான்காயிரத்திற்கும் அதிகமான ஆயுதங்கள் வழங்கப்பட்டிருப்பதாகவும், அதில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலங்களில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட ஆயுதங்கள் வழங்கப்பட்டிருப்பதாகவும் கொழும்பு ஆங்கில ஊடகமொன்று செய்திவெளியிட்டுள்ளது. கட்சிகளின் பொதுச் செயலாளர்களினூடாகவே இந்த ஆயுதங்கள் வழங்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டுள்ள அந்த ஊடகம், பல்வேறு காரணங்களுக்காக வழங்கப்பட்ட ஆயுதங்கள் தற்பொழுது குற்றச் செயல்களுக்குப் பயன்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளது.

சட்டவிரோதமாக வைத்திருக்கும் ஆயுதங்களை ஒப்படைப்பதற்கு பொதுமன்னிப்புக் காலங்களை சிறிலங்கா அரசாங்கம் பல தடவைகள் வழங்கியிருந்தபோதும் பெருமளவான ஆயுதங்கள் இன்னமும் கையளிககப்படவில்லையென பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. இந்தச் சட்டவிரோத ஆயுதங்களைக் கூடுதலாக பாதாள உலகக் குழுக்களே பயன்படுத்தி வருவதாகத் தெரியவருகிறது. இதே வேளை, பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பிற்காக வழங்கப்பட்ட கைத்துப்பாக்கிகள், அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து வெளியேறிய பின்னரும் அரசாங்கத்திடம் கையளிக்கப்படுவதில்லையெனச் சுட்டிக் காட்டியுள்ள கொழும்பு ஆங்கில ஊடகம், இவ்வாறான நடவடிக்கைகளாலேயே சிறிலங்காவில் குற்றச் செயல்களில் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாகத் தெரிவித்துள்ளது.

# நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு திட்டமிட்ட கொள்கை அவசியம்

## கொழும்பில் மலேசிய முன்னாள் பிரதமர் வலியுறுத்து

(கொழும்பு)

நாடொன்றின் பொருளாதார அபிவிருத்திக்கு திட்டமிடப்பட்ட கொள்கையொன்று காணப்பட வேண்டும் என மலேசியாவின் முன்னாள் பிரதமர் கலாநிதி மஹதீர் மொஹமட் தெரிவித்துள்ளார். இந்த பொருளாதாரக் கொள்கைகளை அறிமுகப்படுத்தும்போது உலகமயமாக்கல் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற வர்த்தக மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

நாடொன்று பொருளாதார ரீதியாக அபிவிருத்தியை எட்டும்போது அயல் நாடுகளுடன் புரிந்துணர்வுடன் செயற்படுதல் அவசியம் எனவும் மஹதீர் மொஹமட் கூறினார்.

ஜப்பானும் வியட்நாமும் ஏற்படுத்திக் கொண்டுள்ள பொருளாதார அபிவிருத்தி இதற்கு மிகச்சரியான உதாரணம் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கையில் தெரிவுசெய்யப்பட்ட சில பகுதிகளில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க மலேசிய முன்னாள் பிரதமர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இந்த வர்த்தக மாநாட்டில் முதலீட்டு அபிவிருத்தி அமைச்சர் அனுர பண்டாநாயக்க, நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம ஆகியோரும் கலந்தகொண்டுள்ளனர்.

மலேசிய முன்னாள் பிரதமர் மஹதீர் மொஹமட் சனாதிபதி உட்பட அரசியல் தலைவர்கள் பலரையும் நேற்று முன்தினம் சந்தித்துள்ளார்.

# சுகாதாரத் துறையின் அபிவிருத்திக்கு உலக சுகாதார ஸ்தாபனம் உதவி

(கொழும்பு)

இலங்கையின் சுகாதாரத் துறையை முன்னேற்றுவதற்காக நிதியுதவி வழங்குவதற்கு உலக சுகாதார ஸ்தாபனம் இணக்கம் தெரிவித்துள்ளதாக சுகாதர அமைச்சர் நிமால் சிரிபால டி சில்வா தெரிவிக்கின்றார்.

விசேடமாக இந்நாட்டு வைத்தியசாலைக் கட்டமைப்பின் முன்னேற்றத்திற்காக நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்கு உலக சுகாதார ஸ்தாபனம் இணங்கியிருப்பதாகவும் அவர் கூறுகின்றார். சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் நடைபெற்ற உலக சுகாதார ஸ்தாபனத்தின் 58வது மாநாட்டில் கலந்துகொண்ட பின்னர் சுகாதர அமைச்சர் நேற்று நாடு திரும்பினார். சயரோகம், புற்றுநோய் என்பன இலங்கையில் பரவிச் செல்வது குறித்து ஆராய்ந்து விசேடதொழில்நுட்பக்குழுவொன்றை இலங்கைக்கு அனுப்பிவைக்க உலக சுகாதார அமைப்பு இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். இலங்கையின் வைத்தியசாலை கட்டமைப்புடன் அந்த நோய்கள் குறித்து அறிக்கையொன்றைத் தயாரிப்பதற்கான விசேட செயற்றிட்டத்திற்காக நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியை வழங்கவும் அந்த அமைப்பின் பணிப்பாளர் இணங்கியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# கடல்கோள் அனர்த்த பாதிப்புற்ற மாவட்டங்களின் அரச அதிகாரிகளுக்கு சட்டம் குறித்த கருத்தரங்கு

(கொழும்பு)

கடல்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களிலுள்ள அதிகாரிகளுக்கு சட்டம் தொடர்பான கருத்தரங்கொன்று நடைபெறவுள்ளது.

சட்டஉதவிகள் ஆணைக்குழு, நீதி மற்றும் சட்டஅமுலாக்கல் அமைச்சு மற்றும் பொதுநிர்வாக அமைச்சு என்பன இணைந்து இந்தக் கருத்தரங்கை ஏற்பாடு செய்துள்ளது.

கடல்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய சட்ட நடவடிக்கைகள் தொடர்பாக பிரதேச செயலாளர்கள், மேலதிக பிரதேச செயலாளர்கள் மாவட்டச் செயலாளர்கள் உட்பட்ட அரசாங்க அதிகாரிகளுக்கு இந்தக் கருத்தரங்கு நடாத்தப்படவிருப் பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடல்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட காலி, ஹம்பாந்தோட்டை, களுத்துறை மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களினதும், வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அரசாங்க அதிகாரிகளும் இந்தக் கருத்தரங்கில் பங்குகொள்ளவிருப்பதாக சட்டஉதவிகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இந்தக் கருத்தரங்கின் ஆரம்ப நிகழ்வில் பிரமர் மகிந்த ராஜபக்ஷ பொதுநிர்வாக அமைச்சர் அமரசிறி தொடங்கொட ஆகியோர் கலந்து கொள்ளவிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சட்ட உதவிகள் ஆணைக்குழுவின் தலைவர் எஸ்.எஸ்.விஜயரட்ண, சட்ட உதவிகள் ஆணையாளர் றொகான் சஹபந்து, நீதியமைச்சின் சிரேஷ்ட பிரதிச் செயலாளர் கமலினி டி.சில்வா மற்றும் சட்ட வல்லுநர்கள் இந்தக் கருத்தரங்கில் பேசுதவதற்கு ஏற்பாடுசெய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

# பணிநீக்கப்பட்ட அதிபர்களின் சேவைக்கு கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

பணிநிறுத்தம் செய்யப்பட்ட கொழும்பு ஆனந்தா மற்றும் கண்டி கிங்ஸ்வூட் கல்லூரிகளின் அதிபர்களை மீண்டும் சேவையில் அமர்த்துமாறு விடுக்கப்பட்ட அரச சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்புரைக்கு எதிராக கல்வி அமைச்சின் செயலாளரால் மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது.

அரச சேவைகள் தொடர்பான மேன்முறையீட்டு ஆணைக்குழுவிடம் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது பாடசாலைக்கு மாணவர்களை சேர்க்கும் போது நடைபெற்றுள்ள முறை கேடுகள் தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டு கல்வி அமைச்சின் செயலாளரால் குறிப்பிட்ட அதிபர்கள் பணி நிறுத்தம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# விடுதலைப்புலிகளிடம் விமானங்கள்

# இந்தியாவின் கவனத்தை ஈர்த்துள்ளது

## - போ.நி.க. குழுத்தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளிடம் இலகுரக விமானங்கள், வான் கலங்கள் இருப்பதான விடயம் இந்தியாவின் கவனத்தை ஈர்த்துள்ளது என இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப் புக்குழுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை வெளிநாட்டுப் பத்திரிகையாளர் சங்கத்துடன் நேற்று முன் தினம் ஹொக்லண்ட் மேற்கொண்ட கலந்துரையாடலில் பத்திரிகையாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு அவர் விளக்கம் அளிக்கும்போது,

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள கிளிநொச்சிப் பிரதேசத்தில் விமான ஓடுபாதை ஒன்று இருப்பதாக அரசு குற்றம்சாட்டியிருக் கிறது. நான் அரச உலங்குவானூர்தி மூலம் கிளிநொச்சிக்கு மேலாக ஒருமுறை சென்றபோது அதனை நேரடியாகக் கண்டுள்ளேன்.

இது தொடர்பாக அரசின் கவலையை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரான நாம் ஏற்கனவே விடுதலைப்புலிகளிடம் தெரிவித்துவிட்டோம். ஆனால், புலிகள் இன்னமும் அந்த இடத்திற்கு யுத்த நிறுத்தக் கண்காணிப்பாளர்களை நேரடியாகச் செல்ல அனுமதிக்க வில்லை, காலக்கிரமத்தில் விடுதலைப்புலிகள் இந்த அனுமதியை எமக்கு வழங்குவார்கள் என நான் நம்புகிறேன்.

விடுதலைப்புலிகளிடம் இலகுரக விமானங்கள் ,வான் கலங்கள் இருப்பதாக அண்மைக் காலங்களில் வெளியான அரசின் குற்றச்சாட்டுக்கள் இன்னமும் குற்றச்சாட்டாகவே இருக்கின்றன. ஏனெனில், நாம் நேரடியாக அவ்விடத்திற்குச் சென்று உண்மையைத் தெளிவுபடுத்தப் புலிகளால் எமக்கு இன்னமும் அனுமதி தரப்படவில்லை.

ஆனால், இந்த விடயம் இலங் கையின் கவலையையும், கவனத் தையும் மட்டுமல்ல, இந்தியாவின் கவனத்தையும் ஈர்த்துள்ளதெனவும் அவர் அங்கு கூறினார்.

விடுதலைப் புலிகளிடம் சட்டவிரோதமாக ஓடுபாதையும், வான் கலங்களும் இருக்குமானால், அவை பயன்படுத்தப்படுமானால் அவை உள்நாட்டு சட்டவிதிகளை மட்டுமல்ல, சர்வதேச சட்ட வரம்புகளையும் மீறுவதாக அமையும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஆனால், சிறிலங்கா அரசோ, அதன் படைகளோ இந்தக் குற்றஞ்சாட்டப் பட்டுள்ள ஓடுபாதை மீது தாக்குதல் நடத்துமேயானால், அது இலங்கையில் மீண்டும் ஒரு யுத்தத்தை ஆரம்பித்து விட்டது என்பதற்கு ஒப்பாகிவிடும் என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

# இணுவிலில் உந்துருளி மோதி ஒருவர் வலது கால் பெருவிரலை இழந்தார்

### — உந்துருளியில் பயணித்தோர் தலைமறைவு

(இணுவில்)

உந்துருளியும், ஈருருளியும் மோதிக் கொண்டதில் ஈருருளியில் பயணம் செய்தவரின் வலது கால் பெருவிரல் துண்டாடப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை இணுவில் வைத்தியசாலைக்கு அண்மையாக இடம்பெற்ற இவ்விபத்தில் கால் விரல் துண்டிக்கப்பட்டவர் உடுவிலைச் சேர்ந்த தர்மலிங்கம் என்பவராகும். வேகமாக பின்னால் வந்த உந்துருளி மோதியதினாலேயே இவ்விபத்து இடம்பெற்றது. உந்துருளியில் வந்த இளைஞர்கள் மூவரும் உந்துருளியைக் கைவிட்டு தப்பியோடியுள்ளனர்.உந்துருளியையும், ஈருருளியையும் சுன்னாகம் பொலிசார் எடுத்துச் சென்றுள்ளனர். (41)

## சிவராம் நினைவாக இன்று பிரார்த்தனை

ஊடகவியலாளர் சிவராமின் முதலாம் மாத பிரார்த்தனை இன்று கொழும்பு கொள்ளுப்பிட்டியிலுள்ள சென் அன்ரூஸ் தேவாலயத்தில் நடைபெறவுள்ளது. பேராசிரியர் சிவத்தம்பி, விக்டர் ஐவன், ராஜ்பல் அபேநாயக்க ஆகியோர் இரங்கலுரை நிகழ்த்தவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# நெல்லியடியில் சிறிலங்கா படையினர் அடாவடி சினமடைந்த மக்கள் கடும் வாக்குவாதம்!

யாழ். வடமராட்சி நெல்லியடியில் அமைந்துள்ள பிள்ளையாரடிசிறிலங்கா படை காவல் நிலையம் மீது இனந்தெரியாதோர் குண்டுத்தாக்குதல் நடத்தியதாகக் கூறி அப்பகுதி மக்கள் மீது சிறிலங்காப் படையினர் மேற் கொண்ட கெடுபிடியை அடுத்து படையினருக்கும், மக்களுக் குமிடையில் முறுகல் நிலை தோன்றியுள்ளது.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது;

வியாழக்கிழமை இரவு பிள்ளையாரடி காவல் நிலையம் மீது இனந்தெரியாதோர் பெற்றோல் குண்டை வீசியதாகக் கூறி நேற்று அப்பகுதியினூடாக பயணித்த மக்கள் மீது சிறிலங்கா படையினர் சோதனைக் கெடுபிடிகளை மேற கொண்டனர்.குறித்த சோதனைச் சாவடிப்பகுதியில் எந்த வொரு அசம்பாவிதங்களும் இடம் பெற்றதற்கான தடயங்கள் எதுவும் காணப்படாத நிலையில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட கெடுபிடியால் சினம் கொண்ட மக்கள் சிறிலங்காப்படையினருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் படையினர் மக்களுடன் கடுமையாக நடந்து கொண்டதையடுத்து படையினருக்கும், மக்களுக்குமிடையில் முறுகல் நிலை வலுவாகியுள்ளது.

தொடர்ந்து ஆத்திரமுற்ற மக்கள் படையினர் மீது கற்களை வீசித்தாக்கினர்

சம்பவங்களைத் தொடர்ந்து யாழ்ப்பாண போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவினர் நெல்லியடி சிறிலங்காப் பொலிசாரிடம் சென்று விசாரணைகளை நடாத்தினர்.



முட்கம்பி வேலியிடப்பட்டு இராணுவ பாதுகாப்புடன் காணப்படும் திருமலை புத்தர் சிலை

# வீரமுரசு எழுச்சி நிகழ்வில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சிப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் வீரமுரசு நிகழ்வும், மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வும் நாளை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி பாரதிபுரம் கிராம தேசிய எழுச்சிப் பேரவை செயலர் தலைமையில் பாரதிபுரம் பாரதிவித்தியாலயத்தில் மேற்படி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் கலந்துகொண்டு சமகால அரசியல் நிலை குறித்து கருத்துரைகள் வழங்கவுள்ளதுடன் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# இன்று சிறப்புச் செயலமர்வு

புவியியல்,சித்திரம், தமிழ், அளவையலும் விஞ்ஞான முறையும் போன்ற பாடங்களுக்குரிய சிறப்புச் செயலமர்வு ஒன்று நடைபெறவுள்ளது.

மேற்படி செயலமர்வில் புவியியல் பாடத்துக்கான நில அளவை அலகு பாடத்திற்கு இன்று காலை 9.00 மணிக்கு கிளி.வட்டக்கச்சி மகாவித்தியாலயத் தில் நடைபெறவுள்ளது.

அதேபோல் தமிழ், அளவையியலும் விஞ்ஞான முறையும் 30 ஆம் திகதியும், 31 ஆம்திகதியும், அடுத்தமாதம் முதலாம் திகதியும் காலை 9.00 மணிதொடக்கம் நடைபெறும்.

க.பொ.த உயர்தரத் தேர்வில் தோற்றவுள்ள மாணவர்களுக்கு கிளிநொச் சியிலும், முல்லைத்தீவிலும் நடைபெறும் கால அட்டவணையும் இடங்களும் பின்னர் அறிவிக்கப்படும். அடுத்த சித்திரப்பாடச்செயலமர்வு இன்றும், நாளையும் கிளிநொச்சி அழகியல்கலாமன்றத்தில் காலை 9.00 மணி தொடக்கம் நடைபெறும். முல்லைத்தீவு மாவட்ட சித்திரப்பாட ஆசிரியர்களுக்கு திட்டமிட்டபடி நடைபெறுமென்று தமிழீழ கல்விக்கழகத்தினர் தெரிவித் துள்ளனர். (கு)

# கண்காணிப்புக் குழுத் தலைவர் மட்டக்களப்பு விஜயம்

இலங்கை யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரூப் ஹொக்லண்ட் நேற்று மட்டக்களப்பிற்கு விஜயமொன்றை மேற்கொண்டு சில சந்திப்புகளில் கலந்து கொண்டு விட்டு கொழும்பு திரும்பியுள்ளார்.

மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நந்தன முனசிங்கவை சந்தித்து உரையாடிய பின்பு 23-3 ஆவது இராணுவப் படைப்பிரிவின் புதிய கட்டளை அதிகாரியாக பதவியேற்றுள்ள பிரிகேடியர் எல்.டி.ஆர். மார்க்கை இராணுவ படைப்பிரிவு தலைமையகத்திற்கு சென்று சந்தித்தார்.

இந்தச் சந்திப்புகளில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைகால வன்முறைச் சம்பவங்கள் குறித்து கருத்துக்கள் பரிமாறப்பட்டதாகத் தெரியவருகின்றது. பிற்பகல் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் மாவட்ட அலுவலகத்தில் புளொட் ஈ.பி.டி.பி மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எப். வரதர் அணி ஆகிய குழுக்களின் பிரதிநிதிகளை அவர் சந்தித்தார்.

## சனாதிபதி....

ஜே.வி.பியின் பிரச்சார செயலர் விமல் வீரவன்ச நேற்று இரவு அவசரமாக கொழும்பு திரும்பினார்.

அதேவேளை நேற்றைய பேச்சுவார்த் தையில் பங்கேற்பதற்கு முன்னர் பொதுக்கட்டமைப்பு தொடர்பான ஆவணங்களை தமக்கு தர வேண்டும் என்ற ஜே.வி.பியின் கோரிக்கை சனாதிபதி செயலகத்தால் நிறை வேற்றப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. இந்த ஆவணம் வழங்கப்படுமாக இருந்தால் அதனை பயன்படுத்தி விமல் வீரவன்ச உப தலைவராக உள்ள தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் எல்லே குணவன்ச பொதுக்கட்டமைப் புக்கு எதிராக நீதிமன்ற தடை உத்தரவை பெற முயற்சிப்பார் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இந்த ஆவணம் ஜே வி பிக்கு வழங்கப்ப டவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே எல்லே குணவன்ச தேரர் பொதுக்கட்டமைப்புக்கு எதிராக நீதிமன்றம் செல்ல முயற்சிப்பதும் எனினும் நீதிமன்றத்திற்கு சென்றால் அங்கு தாக்கல் செய்யப்படும் மனுவில் யாரை பிரதிவாதியாக குறிப்பிடுவது என்ற தகவல் எதுவும் தெரியாத நிலையில் இருப்பதுவும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இதற்கிடையில் பொதுக்கட்டமைப்பு விடயத்தில் ஜே வி பி தொடர்ந்தும் முரண்படுமாக இருந்தால் அந்தக் கட்சி தொடர்பாக தாம் வைத்துள்ள ஜே.வி.பியின் குற்றங்கள் தொடர்பான 34 ஆவணத் தொகுதிகளை சனாதிபதி மக்களுக்கு வெளியிடு வார் என்ற எச்சரிக்கை ஒன்றும் சனாதிபதி தரப்பில் இருந்து மறைமுகமாக ஜே.வி.பிக்கு விடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

## புலிகளின்...

கொண்டிருந்த சமயம் இவர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

அனுமதிக்கப்படாத பாதை ஊடாக அத்துமீறி பிரவேசித்து போரதீவு, திக்கோடை, 39 ஆம் கொலனி, வாழைக்காலை, தாந்தாமலை ஆகிய இடங்களில் இவர்கள் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியதாக, இந்தக் கைது தொடர்பாக விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட ஊடகப்பிரிவு தகவல் வெளியீட்டுள்ளது.

விடுதலைப்புலிப் போராளி களினால் கைது செய்யப்பட்ட இம் மூவரும் சட்ட நடவடிக்கைக்காக தமிழீழ காவல்துறையினரிடம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டிருந்தனர்.

தமிழீழ காவல்துறையின் விசாரணையின் பின்பு நேற்று மட்டக்களப்பு -அம்பாறை மாவட்ட தமிழீழ நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டபோது நீதியாளர் எதிர்வரும்பத்தாம் திகதிவரை தடுத்து வைப்பதற்கான உத்தரவைப் பிறப்பித்தார்.

குறிப்பிட்ட மூவரும் நேற்றுமுன்தினம் வரை விடுதலைப்புலிகளின் காவலில் வைக்கப்பட்டிருந்த போது போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் அவர்களை சென்று பார்வையிட்டனர்.

## மரண...

தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. இதன் பின்னர் செய்யப்பட்ட மேன்முறையீட்டைத் தொடர்ந்து ஒருவர் விடுதலை செய்யப்பட்டார். ஏனையவர்கள் தொடர்பில் விசாரணை நடைபெற்று வந்த நிலையில் நேற்று அவர்கள் தொடர்பான தீர்ப்பு வழங்கப்பட்டது.

இதன்படி உரிய சாட்சியங்கள் இல்லாமையால் மரண தண்டனை பெற்றிருந்த பிந்துனுவெவ பொலிஸ் நிலைய இன்ஸ்பெக்டர் சேனக்க கருணாரட்ண ஜயம்பதி, கிராமவாசிகளான சேபால திஸாநாயக்க, சமி மற்றும் பிரேமனந்த ஆகியோர் விடுதலை செய்யப்படுவதாக டி. பி வீரசூரிய தலைமையிலான உயர் நீதிமன்ற நீதியரசர் குழு தீர்ப்பளித்தது. இதேவேளை பிந்துனுவெவ கொலைச் சம்பவம் இடம்பெற்ற பின்னர் மலையகத்தில் தமிழ்மக்கள் நடத்திய சிங்களவர்களுக்கு எதிரான போராட்டத்தின்போதும் சிறிலங்காப்பொலிசாரினால் மூன்று தமிழ் இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிறிலங்கா...

கடைசி யூரிகளற்ற நீதிமன்றிலும் கூட ஓரளவு மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு தீர்ப்பொன்று கிடைத்தது. ஆனால் அதற்குப் பின்னர் சிறிலங் காவிலுள்ள நீதித்துறையில் உள்ள முறை காரணமாக அவர்கள் உயர் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள்.

அங்கு உயர் நீதிமன்றத்திலும் கூட நாங்கள் நீதிச்சுதந்திரம் நிலைநாட்டப்படும் என்று எதிர்பார்த் தோம். ஆனால் எங்களுக்கு கிடைத்தது வெறும் ஏமாற்றந்தான்.

இது சிறிலங்காவில் உள்ள நீதித்துறையில் உள்ள ஏதோ ஒரு குறைபாட்டை எடுத்துக் கூறுகின்றது. அதாவது குற்றவியல் நீதி சார்ந்த முறையில் உள்ள குறைபாடு என்பதை நாங்கள் காண்கிறோம்.

இதனால் நீதித்துறை தனது சுதந்திரத்தை இழந்தவுடன் - சட்டவாட்சி அந்த நாட்டில் இழந்தவுடன் பாதிக்கப்பட்டவர்கள் வேறு ஏதாவது ஒரு வழியில் போராடத்தான் நினைப்பார்கள். அதனால்தான் இந்த நாட்டில் கிளர்ச்சிகள் ஏற்படுகின்றன.

இந்தந் தீர்ப்பிற்கு மேலாக சிறிலங்கவைப் பொறுத்தவரை ஒன்றும் இல்லை உயர் நீதிமன்றம் தான் ஆக உச்ச நீதிமன்றம் ஆனால் இப்படியானாலும் கூட நாங்கள் ஐக்கிய நாடுகள் தாபனத்தில் உள்ள மனித உரிமைக் குழுவிற்கு சில விடயங்களை முறைப்பாடு செய்யலாம் என்றார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மே மாதம் 28ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.